# இறையியல் களஞ்சியம்

வண்ணம் - 08 ஏப்ரல்-ஜூலை 2001



## ''பணிகொள்ள அல்ல பணி செய்யவே வந்தேன்''

**Christian Theological Seminary of Sri Lanka**
**Maruthanarmadam, Chunnakam.**

# இறையியல் களஞ்சியம்

## காலாண்டு வெளியீடு

# IRAI - IYAL KALANJIYAM

## *TAMIL THEOLOGICAL JOURNAL*

ஏப்ரல் - ஜூலை 2001 இதழ் 08

இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி
மருதனார்மடம் – சுன்னாகம்
இலங்கை

| | |
|---|---|
| பதிப்பாசிரியர் | : அருட்தந்தை டி. ஆர். அம்பலவானர் |
| துணை ஆசிரியர்கள் | : அருள்திரு. ரி. தேவநேசன் |
| | அருள்திரு. வி. எஸ். தர்மகுலசிங்கம் |
| | சகோ. எஸ். செல்வந்தா |
| | சகோ. ஏ. ஆர். றோகான் |
| | திரு. சி. பி. பவின்க் |
| நிர்வாகக் குழு | : சகோ. ஏ. எஸ். ரூபன் |
| | சகோ. எஸ். எல். ஜோன் |
| | சகோ. நிவில் ரூபராஜ் |
| ஆலோசகர் | : பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன் |
| கணனி அச்சுப்பதிப்பு | : புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் |
| வெளியீடு | : இலங்கை கிறிஸ்தவ குருத்துவக்கல்லூரி, மருதனார்மடம் — சுன்னாகம். (தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்) |
| PUBLICATION | : CHRISTIAN THEOLOGICAL SEMINARY OF SRI LANKA MARUTHANRMADAM – CHUNNAKAM (For Private Circulation Only) |

# பொருளடக்கம்


பக்கஎண்

01) இறை வாழ்த்து - (i)

02) ஆசிரியர் பார்வையில் . . . - (ii)

03) அகத்தியர் என்றொரு கிறிஸ்தவ சித்தர்,
**- பேராயர் ஜெபநேசன்** **- 01**

04) மாட்சி பொதிந்த சிலுவை,
**- வண. வி. இராஜ்குமார்** **- 12**

05) திருப்பணிவிடையில் பொதுநிலையாளர் பங்கு,
**- வண. வி. என். தர்மகுலசிங்கம்** **- 17**

06) குழந்தை இறையியல் ~ ஓர் அறிமுகம்
**- வண. ரீ. தேவநேசன்** **- 20**

07) பனை மர இறையியல் ~ சிந்தனைத் துளிகள்
**- வண. ஏ. எஸ். ரீ. ஆனந்தன்** **- 26**

08) சிலுவையின் பாதை, **- வண. பா. தேவதாஸ்** **- 29**

09) கிராம மக்கள் மத்தியில் திருப்பணிவிடை,
**- வண. ஜி. டி. மைனசீலன்** **- 33**

10) பாவம் என்றால் என்ன? ~ சிந்தனைத் துளிகள்
**- சகோ. டி. எஸ். சொலமன்** **- 40**

11) அவன் என் ஆசை மகனல்லவா ~ (Selected)
**- சகோ. எஸ். எல். ஜோன்** **- 44**

12) வழியனுப்பு விழாப் பாடல் **- 46**

13) கல்வாரி ~ (கவிதை) **- இராஜன் றோகான்** **- 47**

14) Youth Prays For Peace **- 48**


எழுத்தாளரின் கருத்துக்கள் அவரவரையே சாரும்

# இறை வணக்கம்

சருவேசுரனின் தேவாலயமாய்ச்
சமைத்தே எனக்குள் இருப்பாய் போற்றி
தயவாய் என்முன் ராப்போசனமே
தான் செய்தருள வருவாய் போற்றி
திறமாய்ப் பரன் ஆலயம் விட்டேகாச்
செல்வித் தூண் என்றாக்கும் போற்றி
திருநகரின் பெயர் கடவுளரின் பெயர்
சேர்த்தென் பெயருந் தீட்டாய் போற்றி
நான் என என்னைச் செய்தாய் போற்றி
ஞானமனைத்துந் தருவாய் போற்றி
நல் வழிகாட்டி நிற்பாய் போற்றி
நானே நீ யென்றெண்ணும் போற்றி
இருதய மீதில் பரிசுத்தாவியின்
எல்லா வரமும் ஈவாய் போற்றி
எனை மீட்டவனே எனையாண்டவனே
ஏசுநாதா, போற்றி! போற்றி!

**பொருள்**

என்னைக் கடவுளின் தேவாலயமாய்ப் படைத்து
எனக்குள் இருப்பாயாக, என்முன் திருராப் போசனம்
செய்தருள தயவாய் வருக,
பராபரனது ஆலயத்தை விட்டு வெளியேறாத
என்னைத் திறமான தூணக்கியருள்க
திருநகரின் பெயரையும் கடவுளின் பெயரையும்
என்பெயரையும் சேர்த்து எழுதிவை
என்னையோர் மனிதனாக்கின நீ, எனக்கு
ஞானம் அனைத்தையும் தருக, எனக்கு நல்
வழிகாட்டியாக நில், நானே நீ என்று
எண்ணும் என் இதயத்தில் பரிசுத்தாவியின்
எல்லா வரங்களையும் ஈந்தருள்க

*- கிறிஸ்தவ கவிஞர் வேதநாயக சாஸ்திரியார் -*

# ஆசிரியரின் பார்வையில்...

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நீதி நிறைந்த அமைதிக்காக அயராது மன்றாடி வருகின்றோம். எம் மன்றாட்டிற்கு இறைவன் செவி மடுத்தாரா என்று பலவேளைகளில் சந்தேகம் கொண்டிருக்கின்றோம். – ஏனெனில் செபங்களுக்கு மறுமொழி போர், ஓயாத போர், போல் தோன்று கிறது. – இந்தப் போர் எதற்காக? இதனை ஒரு கவிஞன் பின்வருமாறு விவரிக்கிறார்.

"சத்தியத்தை சாக்கடை யில் சங்கமிக்க செய்து விட்டு
தர்மத்தைக் கொலை செய்து நடுத்தெருவில் தொங்கவிட்டு
அநியாயச் செய்கைக்கு 'அற' மென்று பெயரிட்டு
நியாயத்தைச் சாகடித்தால் நல்லமைதி வந்திடுமோ?"

ஆம், அமைதிக்காக மன்றாடினோம், அவதியையே கண்டோம், சமாதானத் திற்காகக் குரல் கொடுத்தோம் – கொடிய போரையே கண்டோம். இன வெறியில் ஊறிவிட்ட நாட்டின் அரசு கொள்கையற்ற குழப்பத்திலே அறிவிழந்து ஆடுகின்ற போது – எப்படி அமைதி கிட்டும்?

நிரந்தர அமைதி வேண்டுமாயின், போர் நிறுத்தம் மட்டும் போதாது, 'அக அமைதி பிறக்காமல் யுக அமைதி பிறக்காது' – அமைதியை நாடும் நமக்கு "மன்னிப்போம் – மறப்போம் – மதிப்போம்" என்ற கொள்கை வேண்டும். இதுவே அமைதியின் அரிசுவடி – இதனை நம் அரிச்சுவடாக் கொள்ளவேண்டும். – விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நமக்குள் வருமட்டும், திசைத் தடுமாற்றங்களே நம் மத்தியில் ஏற்படும் – நீதி நிறைந்த அமைதியை நாம் பெறுவது கடினம்.

இன்று நாம் செய்ய வேண்டியது யாது? "அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்"

(மத். 5:9) என்றார் இயேசுபெருமான் - எனவே நமது சபைகளில், சமுதாயத்தில் நீதி நிறைந்த அமைதி மலர நாம் விடாது உழைக்க வேண்டும். இம்முறை, 'திருப்பணி விடை' பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கட்டுரைகள் எழுதும்படி அழைத்தோம். சிலர் இவ்விடயத்தைப் பல கோணங்களில் சிந்தித்து - அனுபவரீதியாகக் கட்டுரைகளை வரைந் திருக்கிறனர். இதற்கான முகப்பு படத்தையும் போட்டிருக்கின்றோம். - கிறிஸ்து பெருமான் - 'பணி கொள்ள அல்ல, பணி செய்யவே வந்தேன்' (மாற். 10:45) என்ற திருவாக்கிற்கேற்ப நங்கூரமில்லா மரக்கலம் போல் அங்குமிங்கும் அலைந்து திரியும் எம் மக்களுக்குக் கிறிஸ்துவின் அடியவர்களாகிய நாம் செய்ய வேண்டிய பணியைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்க இக் கட்டுரைகள் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

கடவுள் வடிவில் விளங்கிய கிறிஸ்துபிரான் - கடவுளுக்கு இணையாயி ருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க விரும்பாமல் - தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று, மக்களுக்குப் பணி செய்ய வந்தார். இதைத் தெளிவாக எம்பெருமான் - தாம் சிலுவை யில் மரிக்க முன் நிறுவிய இறுதி இராவிருந்தின் போது தம் சீடர்களின் காலடிகளைக் கழுவிய நிகழ்வில் (யோ.13:1 -15) காண்கின்றோம். - அவர் அன்று கூறியது "நான் உங்களுக்குச் செய்தது என்னவென்று உங்களுக்கு புரிந்ததா? ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றொருவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யு மாறு நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன்" என்பதே.

இன்று நம்மக்கள் போரின் விளைவினால் சொல்லொணாத் துயரமுற்று நிம்மதியற்று, ஆயனில்லா ஆடுகளைப் போல பதக்களிப்புடன் சிதறடிக்கப் பட்டு வாழ முடியாமல் தவிக்கும் நிலையிலிருப்பதை நாம் அறிவோம். இவர்களுக்கு உத்தமமும், உண்மையுமான பணியை ஆற்றும்படி, எம்மைத் தேர்ந்தெடுத்து சுத்திகரித்து - 'மிகச் சிறியோராகிய சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' என்று கூறி (மத். 25:40) தம்முடன் இணைந்து பணியாற்றும் படி அழைக்கிறார். அவரின் திருவுளத்திற்கேற்ப திருப்பணியில் நம்மை முழுவதுமாக ஈடுபடுத்துவதே நம் கடமை.

இந்த இதழில் பேராயர் ஜெபநேசன் – 'அகத்தியர் ஒரு கிறிஸ்தவ சித்தர்' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை வரைந்துள்ளார் — வாசித்துப் பயனடையுங்கள் – 'குழந்தை இறையியல்' பற்றியும் – 'திருப்பணிவிடையில் பொதுநிலையாளரின் பங்கு', 'கிராம மக்கள் மத்தியில் திருப்பணி' ஆகியன பற்றியும் எழுதிய கட்டுரைகள் உங்கள் சிந்தனையைத் தூண்டும், இவற்றுடன் "பனைமர இறையியல்" பற்றி எழுதப்பட்ட கட்டுரை சிந்தனைக்கு விருந்தாக அமையும்.

அன்பர்களே! எங்கள் சஞ்சிகையைக் கூடிய வரை ஒழுங்காக வெளியிட முயலுகின்றோம் – உங்கள் ஒத்துழைப்பு தேவை. இச் சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரைகளைப் பற்றி உங்கள் விமர்சனங்களை எழுதுங்கள். உங்கள் கருத்துக்கள் எங்களை ஊக்கப்படுத்தும், இதுவரை எங்களுக்கு உறுதுணையாயிருந்து வழிநடத்தி வரும் இறைவனுக்கும், பேராயருக்கும் கட்டுரைகள், கவிதைகள் எழுதிய அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள்.

> இச் சஞ்சிகைக்குரிய ஆண்டு சந்தா ரூபா 100/– ஐ அனுப்புங்கள் உங்கள் நண்பர்களுக்கு இச் சஞ்சிகையை அறிமுகப்படுத்துங்கள்.

– நன்றி –

டீ. ஆர். அம்பலவாணர்

# அகத்தியர் என்றொரு கிறிஸ்தவ சித்தர்

- பேராயர் எஸ். ஜெபநேசன் -

## சித்தர் பரம்பரை

தமிழ் மக்களின் இலக்கிய வரலாற்றிலும் சிந்தனை வளர்ச்சியிலும் சித்தர்கள் முக்கியமானதோர் இடத்தினை வகிக்கின்றனர். இவர்கள் கி.பி. 12ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரை பெருமளவிற் தமிழ் நாட்டில் செயற்பட்டு வந்ததாக தெரிகின்றது. அவர்களுடைய பாடல்கள் மிகவும் எளிமையானவை.

ஆனால் மிகுந்த முற்போக்கு சிந்தனைகளை உள்ளடக்கியவை. இவர்கள் பல தெய்வ வணக்கத்தையும், உருவ வழிபாட்டினையும், சாதியமைப்பினை யும், வீண் சடங்காசாரங்களையும் கடுமையாகத் தாக்கினார்கள். இதனாலே தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சிந்தனை வளர்ச்சி ஆய்விலும் இவர்களுக்கு உரிய இடம் அளிக்க மரபு வாதிகள் மறுத்துவிட்டனர். திருமூலர் என்ற ஆறாம் நூற்றாண்டு சித்தரை விட வேறு எந்தச் சித்தரையாவது பெரும் பாலான தமிழ் மக்கள் போற்றியது கிடையாது.

கடவுள் இல்லை என்று சாதிக்கின்ற திராவிட இயக்கத்தார் சித்தர் பாடல் களைத் தமது நூல்களிலும் தாராளமாகப் பயன்படுத்தினர்.

“நட்ட கல்லைத் தெய்வம் என்று நூறு புஸ்பம் சாத்தியே சுற்றி வந்த முணு முணென்று சொல்லும் மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமா, நாதன் உள் இருக்கையில் சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமோ?”

இது சிவ வாக்கியர் என்னும் சித்தருடைய பாடல்களில் ஒன்று. “பராசக்தி” திரைப் படத்தில் கதாநாயகன் பைத்தியக்கார வேடத்தில் கூறுவதாக கருணாநிதி வசனம் அமைத்தார்.

சித்தர்கள் நாத்திகர்கள் அல்லர். சிவனையே முழுமுதற் கடவுளாகப் போற்றினார்கள். ஆனால் பல தெய்வ வணக்கத்தை அவர்கள் கடுமையாகச் சாடினார்கள். பட்டினத்தார் ஓரிறைக் கோட்பாட்டினைப் பின்வரும் வரிகளில் விளக்கினார்.

"ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வம் எல்லாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம்பார், நல் அறமும் நட்பும்
நற்றென்றிரு, நடு நீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு, மனமே உனக்கோர் உபதேசம் இதே"

சாதி வேற்றுமைகள் தகர்த்தெறியப்படல் வேண்டும், வீண் சடங்காசாரங்கள் அவசியமில்லை என்றனர்.

"கோயில் ஆவது ஏதடா குளங்கள் ஆவது ஏதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
சாதியாவது ஏதடா? சலம் திரண்ட நீரெல்லாம்
புதுவாசல் ஒன்றலோ, புதம் ஐந்து ஒன்றல்லோ?"
என்று அறைகூவல் விடுவித்தார் சிவவாக்கியர்.

சித்தர்கள் திருமறையிற் காணப்படும் எசேக்கியேல், எலியா, ஆமோஸ் போன்ற தீர்க்கர்களையும், யோவான் ஸ்நானகனைப் போன்ற சீர்திருத்த வாதிகளையும் பல வழிகளில் ஒத்திருக்கின்றனர்.

யோவான் ஸ்நானகனைப் பற்றி வேதநாயக சாஸ்திரியார் எழுதிய வரிகள் தமிழ்ச் சித்தர்களை ஞாபகமூட்டுகின்றன.

"ஒப்பிய வெட்டுக்கிளியோடு தேனையுண்டு ஒர்
ஆரணியமே கிடந்து ஒட்டகத்
தோலை உடுத்த ஓர் இருடி
உன்முன் (இயேசு முன்) சேட்டானாய் வந்தோன்"

சித்தர்களுடைய வாழ்வியலும் தத்துவமும் பலரைக் கவர்ந்தன. சித்தரின் வாழ்வினை மு. வரதராசன் பின்வருமாறு விளக்கிக் கூறுகின்றார்.

"இந்தச் சித்தர்கள் பெரும்பாலோர் சைவர்கள் ஆயினும், பொதுவாக அவர்கள் சாதி சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள், மூட நம்பிக்கை களுக்கு இடந்தராதவர்கள், சடங்குகளையும் சடங்குகளோடு ஒட்டிய வழி பாடுகளையும் போற்றாதவர்கள். தம் வாழ்க்கை அனுபவங்களால் கண்ட றிந்த உண்மைகளை மட்டுமே தெளிவாக எடுத்துச் சொல்வது அவர்களின் நோக்கம். இவர்கள் தத்துவ ஞானிகள், மெய்யுணர்வு பெற்றவர்கள், அவர் களிற் சிலர் யோகிகளாய்ச் சிறப்புப் பெற்றவர்கள், சிலர் மருத்துவர்களாய் விளங்கினவர்கள், இவர்களின் வழியில் வளர்ந்த தமிழ் மருத்துவக் கலை சித்த மருத்துவம் எனப் பெயர் பெற்றது. இவர்கள் பழைய தமிழ் இலக்கண மரபுகளையும் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. கற்றறிந்த புலவர்களுக் காகவென்று பாடல்கள் இயற்ற விரும்பவில்லை"

"The term has been loosely used and understood to denote a certain category of mystic poets, who were grim and uncouth ascetics with super natural powers"

என்பது ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் கருத்து (2)

"சித்தர்கள் என்ற சொல் பலவிதமான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. இறையிணைவுப் பண்பு கொண்ட ஒரு வகைப் புலவர் கூட்டம் ஒன்றினைச் சுட்டி நின்றது. இவர்கள் கடும் போக்காளர், ஒளிவு மறைவு அற்ற வாழ்வியலைக் கொண்ட சந்தியாசிகள். இயற்கையை மீறின அற்புதச் செயல்களைச் செய்ய வல்லவர்கள் என்று நம்பப்பட்டவர்கள்" என்கிறார் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர்.

இவர்களது புதுமைக் கருத்துக்களும் பாட்டின் எளிமையும் மகாகவி சுப்பிர மணிய பாரதியாரையும் கவர்ந்தன.

அவர் "எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா,
நானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாளில்"
என்று பாடி மகிழ்ந்திருக்கிறார்.

சித்தர்கள் தமது கருத்துக்களைச் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று மிகவும் எளிய நடையிலேயே பாடினார்கள். மகாகவி பாரதிக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே மக்களைப் பற்றி, மக்களி டையே வழங்கும் மொழியில் பாடல்களை இயற்றியவர்கள் சித்தர்கள். மக்களுக்குப் பயன்படும் வகையில் பாடல்கள் இயற்ற விரும்பிய காரணத்

தால் நாட்டுப் பாடல்களில் கண்ட பல செய்யுள் வடிவங்களைப் பயன்படுத்தி எளிய பேச்சு வழக்குச் சொற்களைக் கையாண்டு பாடல்களை அமைத்தனர். இதனாலே அவர்கள் பாடல்கள் முன்னிலை ஒருமை வினை முற்றுடன் முடிகின்றன. சில குதம்பாய், ஞானப்பெண்ணே என்ற விளிச் சொற்களுடன் முடிகின்றன.

"பாரப்பா, கேளப்பா, ஆரப்பா, தேடப்பா, நாடப்பா, சூட்சுமம் கேளு, குறியைக் கேளு, எங்கே கேளு" என்ற பதங்கள் சித்தர் பாடல்களில் பரந்து 'காணப் படுகின்றன.

சித்தர்கள் பதினெண்மர் என்பது பொதுமரபு,
சித்தர்கள் ஒன்பதின்மர் என்றும் ஒரு நம்பிக்கையுண்டு. ஆ. சிங்காரவேலு முதலியார் தொகுத்த அபிதான சிந்தாமணியில் சித்தர்கள் ஒன்பதின்மரின் பெயர்கள் தரப்படுகின்றன. அந்த வரிசையில் அகத்தியர் பெயர் இல்லை.

சித்தர் பதினெண்மர் என்ற வரிசையில் பின்வரும் பெயர்கள் தரப்படு கின்றன.

1. அகத்தியர்
2. போகர்
3. திருமூலர்
4. கைலாசநாதர்
5. கூன் கண்ணர்
6. கோரக்கர்
7. நந்தி
8. சட்டைமுனி
9. கொங்கணர்
10. மச்சமுனி
11. லாசமுனி
12. உரமுனி
13. கமலமுனி
14. இடைக்காடர்
15. புன்னாக்கீசர்
16. சுந்தரானந்தர்
17. உரோமரிஷி
18. பிரமமுனி (3)

சித்தர் பற்றிய ஆய்வுக்குப் பெரும் பிரச்சனையாகவிருப்பது சித்தர்கள் பெயர்களில் எழுதப்பட்டுள்ள போலி இலக்கியங்கள் தாம் (Spurious). இதனாலே அவற்றின் காலம் எது, இடைச் செருகல்கள் எவை, உண்மை யான சித்தர் பாடல்கள் எவை என்று கண்டுகொள்ள முடியாதிருக்கின்றது. மேலும் சித்தர்கள் எத்தனைபேர் என்று அறிய முடியாதிருக்கின்றது. சில சித்தர்பாடல்கள் ஔவையார், திருவள்ளுவர், வால் மீகர், அகத்தியர் என்னும் பெயர்களுடன் காணப்படுகின்றன.

## அகத்தியர் சிறப்பு

அகத்தியர் பண்டைக் காலங்களிலிருந்து தமிழ் மொழியை வளர்த்த முனிவர் என்றும் அவர் சிவபெருமானிடத்தில் தமிழைக் கேட்டறிந்தவர் என்றும், அவருக்கு இருப்பிடம் பொதியமலை என்றும் கூறுவது மரபு. அவர்

இயற்றமிழ் , இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழையும் கற்றுத் தேர்ந்து "அகத்தியம்" என்னும் முத்தமிழ் இலக்கண நூல் ஒன்றினை இயற்றினார் என்றும், அகத்தியம் இப்பொழுது அழிந்துவிட்டது என்றும் கூறுவார்கள்.

அகத்தியரைப்பற்றி விரிவான ஆய்வினை மேற்கொண்ட கே. ஏன். சிவராஜ பிள்ளை *Agastya in Tamil Land* என்றொரு சிறந்த நூலை எழுதியுள்ளார். அந்த நூலில் பல ஆதாரங்களை காட்டி அகத்தியர் என்றொருவர் தமிழ் நாட்டில் வாழவேயில்லை என்று நிறுவியுள்ளார். **(4)**

ஆனால் அகத்தியர் என்ற பெயர் தமிழ் மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. பிற்காலத்தில் பல புலவர்கள் அகத்தியர் என்ற பெயரைத் தாங்கி நூல்களை எழுதியுள்ளார்கள். சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் மட்டும் அகத்தியர் என்ற பெயரில் சுமார் **96** நூல்கள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். **(5)** அகத்தியர் தேவாரத் திரட்டு, அகத்தியர் சித்த மருத்துவம் அகத்திய பக்தி விலாசம், அகத்திய மந்திர ஜலாம், அகத்திய சோதிடம், அகத்திய புஜாவிதி என்பன முக்கிய மானவை. திருமறையில் மோசே முனிவர், தாவீது ராஜா, சாலமன் ராஜா, ஆகியோர் பெற்றிருந்த அங்கீகாரத்தையும் கீர்த்தியையும், அகத்தியர் என்ற பெயர் தமிழ் மக்கள் மத்தியில் பெற்றிருந்ததாகத் தெரிகிறது.

## அகத்தியர் ஞானமும் அகத்தியர் ஞானப்பாடல்களும்

அகத்தியர் என்ற பெயரிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட சித்தர் பாடல்கள் இருக்கின்றன. பெரும்பாலான சித்தர்பாடல் தொகுப்புக்களில் காணப்படு வது அகத்தியர் ஞானப் பாடல்களேயாகும். இப்பாடல்கள் ஒருவனே தேவன், மனத்தூய்மையே முக்கியம், சடங்குகள் வீண், சாதிவேற்றுமை தீது, எனப் பல சீர்திருத்தக் கருத்துக்களை கூறுகின்றன. ஆனால் அகத்தியர் ஞானப் பாடல்கள் இயற்றிய புலவர் கிறிஸ்தவரல்லர்.

குருவாக உமைபாக னெனக்குத் தந்த
கூறரிய ஞானமது பத்தின் மூன்று
பொருளாகச் சொல்லி விட்டேனப்பா

என்றே அகத்தியர் ஞானப்பாடல்கள் நிறைவு செய்யப்படுகின்றன. அனால் "அகத்தியர் ஞானம்" என்ற முப்பது செய்யுட் களை இயற்றியவர் ஒரு கிறிஸ்தவர். கிறிஸ்தவ தொண்டர்களும் புலவர்

களும் தத்தமது காலத்தில் மக்களிடையே பெருமதிப்பு பெற்றிருந்த இலக்கிய வகைகளைப் பயன்படுத்தி கிறிஸ்தவ இலக்கியம் படைத்தனர். இந்த வகை யில் பெத்தலேங்குறவஞ்சி, ஞானதச்சன் நாடகம், இரட்சண்ய யாத்திரீகம் என்ற காவியம் கிறிஸ்தவ திருவிரட்டை மணிமாலை, திருச் சதகம், திருப் பல்லாண்டு, இரட்சண்ய அம்மானை என்பன குறிப்பிடத்தக் கவை, கிறிஸ் தவ மிஷனரிமார் இத்தகைய இலக்கியங்கள் தோன்றுவதற்கும் கிறிஸ்தவம் சுதேச நிலைப்படுத்தப்படுவதற்கும் உற்சாகமளித்தனர்.

கிறிஸ்தவம் கி.பி. முதலாம் நூற்றாண்டிலே தென்னிந்தியாவிற்கு வந்து விட்டதெனச் சிலர் கூறுவர். இயேசுவின் சீடரான புனித தோமா கி.பி. 52ம் ஆண்டில் மயிலாப்பூரில் பணியாற்றி இரத்தச் சாட்சியாக மறைந்தார் என்று கூறப்படுகின்றது. ஆனால் கி.பி. 16ம் நூற்றாண்டிற்குப் பின்னர் தான் கிறிஸ்தவம் தமிழ் நாட்டிலே காலூன்றியது. 1542ல் பிரான்சிஸ் சேவியரும் 1603ல் றொபேட்டி நொபிலியும் தமிழ் நாட்டிற்கு வந்தார்கள். முதலாவது புரட்டஸ்தாந்து மிஷனரியாகிய சீகன்பால்கு 1703ம் ஆண்டு தமிழகத்திற்கு வந்து சேர்ந்தார். இவர்களின் போதனைகளினாலே கவரப்பட்ட ஒரு தமிழறி ஞர் அக்காலத்தில் பாமர மக்கள் விரும்பிப் படித்த சித்தர் பாடல் களின் பாணியில் கிறிஸ்தவ நம்பிக்கைகளை "அகத்தியர் ஞானம்" என்ற பெயரில் வடித்தெடுத்தார் என்றே கொள்ளக்கிடக்கின்றது. இதன் உட்கிடையைப் பார்த்தால் இந்த "அகத்தியர்" கத்தோலிக்கரன்றிப் புரட்டஸ் தாந்தவரா கவே இருந்தாரென்று தென்படுகின்றது. பாப்பரசரைப் பற்றியோ கன்னி மரியாளைப் பற்றியோ ரோமாபுரியைப் பற்றியோ எந்த விதமான குறிப்பு களும் காணப்படவில்லை. இந்த அகத்தியர் "சீகன்பால்குவின் போதனை களால்" அல்லது அதற்கு முன்னர் கேரளத்தில் நிலைபெற்றிருந்த கிறிஸ்த வத்தினால் கவரப்பட்டிருத்தல் வேண்டும். இவர் தமிழ் இலக்கியத் தைக் குறிப்பாக சித்தர்பாடல்களை நன்கு கற்றிருந்தார் என்று தெரிகின்றது.

பாரப்பா, ஆச்சப்பா, மயக்கமப்பா, தமிழ் மார்க்க முறையைக் கேளு, என்று பாமரமக்களின் பேச்சு வழக்கில் தமது முப்பது செய்யுட்களையும் அமைத்துள் ளார். மேலும் ஞானஸ்நானத்தைத் தீட்சையென்றும் இரட்சிப்பை நாடுவ தனை சிவபாதம் தேடுவதென்றும், மோட்சத்தை சிவம் என்றும் இறைவன் இருக்குமிடத்தைச் சுத்த சிவன் இருப்பிடம் என்றும் குறிப்பிட்டார்.

அகத்தியர் ஞானம் எதிர்பார்த்த வரவேற்பினை மக்களிடையே பெற்றது. 1983ல் இதன் புதிய பதிப்பொன்றினை வெளியிட்ட டாக்டர் வீ. ஞான

சிகாமணி 1924ம் ஆண்டிற்கு முன்னரேயே 5 பதிப்புக்கள் வெளிவந்துள் ளனவென்று அப்பதிப்பின் அறிமுகவுரையில் எழுதியுள்ளார். (6)

கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி கிறிஸ்தவரல்லாதாரும் இதனை விரும்பிப் படித்ததாகத் தெரிகின்றது. இது யாழ்ப்பாணத்திலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் படிக்கப்பட்டு வந்ததற்குச் சான்றுகள் உண்டு. 1816ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பணியாற்ற வந்து சேர்ந்த டாக்டர் டானியல் பூவர் அகத்தியர் ஞானத்தைப் பற்றி 1833ம் ஆண்டு எழுதிய கடிதம் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார்.

"நேற்று சண்டிலிப்பாயில் நடைபெற்ற வழமையான கூட்டத்திற்குப் பின்னர் அகத்தியரின் 30 பாடல்களை பாடச் செய்தேன். அவர் தமிழ் இனத்திலே எல்லோரையும் விஞ்சிய கல்விமான் என்று கொள்ளப்பட முடியாவிடினும் தலை சிறந்த கல்விமான்களில் ஒருவர் என்று சொல்லப்படுகிறது. தமிழ் மொழியை அமைத்தவர் என்ற பெருமை அவருக்கு வழங்கப்படுகின்றது. அவர் இப்பொழுதும் நெடுந் தொலை வில் உள்ள ஒரு நாட்டில் வாழ்ந்து வருகிறார் என்று கூறுவர். நமக்குக் கிடைத்த தகவல்களின் படி, அவர் ஒரு சாண் உயரமுடையவர். இவருடைய பாடல்களைப் பற்றி நான் முன்னரேயே கேள்விப்பட வில்லையே என்று வேதனைப்படுகின்றேன். ஏனெனில் அவர் பாடல் களில் கூறப்படும் பல சிந்தனைகள் நாம் பிரசங்கிக்கும் கோட்பாடு களை ஒத்திருக்கின்றன.

எனவே இந்நூல் இரட்டை வாள் போற் பயன்படும். இவர் யூதர்களிட மிருந்தோ யூதர் வழி வந்த சிந்தனையார்களிடமிருந்தோ இக் கருத்துக்களைப் பெற்றிருக்க வேண்டும்.

ஒரு பாடல் சாத்தான் தனது மமதையால், தான் இறைவனுக்குச் சரிசமமாகவிருக்க வேண்டுமென்று எண்ணினான். அவன் தனது இடத்தினின்றும் விலக்கப்பட்டு நரகத்துக்குள் போடப்பட்டான். அவன் எப்பொழுதும் மக்களை ஏமாற்றி நரகத்துக்குள் தள்ளிவிடுகின்றான் என்று கூறுகிறது. இன்னொரு பாடல் ஒரே தெய்வமாகிய கடவுள் உலகத்தைப் படைத்த பின்பு, அதனைத் தூய்மைப்படுத்தி குருவாக இவ்வுலகிற்கு வந்தார். அவர் குடும்பமற்றவர், வதிவிடமில்லாதவர், ஜெபம் செய்தார், தமது சீடர்களை விட்டு விட்டு பரலோகம் சென்றார். அவரை வழிபடுங்கள். மூன்றாவதாக இன்னொரு பாடலில் மூன்று

மொன்றாகிய கடவுள் உண்டு. அவர் மும்மூர்த்திகளல்லர் (தமிழில் கூறப்படும் மூவர்) அவர் ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, சிவனும் இல்லை, லிங்கமும் இல்லை அவரை வழிபடுங்கள்.

நிறைவுரையாக

இந்த உலகில் என்ன நடைபெறுகின்றதென்று கூறிவிட்டேன் சிவன், விஸ்ணு, பிருமா சாத்தான்களே என்று கூறப்பட்டுள்ளது. (7)

**அகத்தியர் ஞானத்தில் கூறப்படும் முக்கியமான உண்மைகள் :**

1. இதுவரை வந்த சித்தர்கள் பூரணமாம் முழுமுதலை அறியவும் அறிவிக் கவும் இயலாது நின்றனர்.
2. பராபரனாகிய கடவுள் ஆறு குணங்களைக் கொண்ட சோதி அவருக்கு எப்பொருளுமே ஒப்பாக முடியாது. எனவே மயங்காதே. ஆழ்ந்து கவனித்துப் பார்த்து, முப்பொருளை அறிந்து உணர்ந்து பார், பத்துக் கற்பனைகளாய்க் காண்பாய்.
3. தன்னைப் படைத்த கடவுளை அறிந்தவனுக்கு மோட்சமுண்டு. அப்படி அறியாதவர்கள் எரிநகரில் அழிந்து போவார்கள்.
4. மோட்சம் என்ற நாட்டிற்கு போவதற்கு தடை ஏதும் உண்டோ? அங்கே போவதற்கு பொய்கையில் முழுக வேண்டாம், இலைக்கறி உண்டு தலை கீழாய் நின்று தவம் செய்ய வேண்டாம், தீ வளர்த்துக் குளிக்கவும் வேண்டாம்.
5. நாள்தோறும் நெறி தவறாமல் பூசை செய்தாலும் கிரமமாக வீடு பேற்றினை அடைவார்களா? அப்படி மெய்யறிவு அழிந்து போனால் சாத்தானின் வசம் ஆவது வெளிப்படையாகத் தெரிவது தானே.
6. சாத்தான் தன்னுடைய அகந்தையாலே தன்னைத் தேவனுக்குச் சரியாக உயர்த்தினான். அதனால் தன்னுடைய மேன்மையான நிலை குலைந்து பாதாளகுழிக்குள்ளே தள்ளப்பட்டான். அவன் தான் கெட்டதுமட்டு மல்லாமல், மக்களையும், ஒவ்வொரு நாளும் மோசம் போக்கி, அவர்களு டைய பல கலையும் கற்று உயரும் அறிவினைக் கட்டு கதைகளாலே மயக்கி நரக பாதாளத்திலே தன்னோடு இழுத்துக் கொள்கிறான். இந்நிலையினை மக்களும் அறியாமல் மோசம் போகின்றார்கள்.
7. நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், மனிதரின் நினைவை மயக் கும் புராணங்கள், சுயவேத சாஸ்திரத்தை உண்மையாக நம்பினவர்

களுக்கு ஈடேற்றமுண்டு. அவர்களுக்கு நிலையான ஞானக் கண்ணொளியும் நிற்கும்.

8. வாழ்க்கையில் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி, கண்ணீர் சிந்தி அழுது, உள்ளத்தினின்று அந்த அசுத்தங்களை நீக்கி மனந்திரும்ப வேண்டும். சச்சிதானந்தன் ஆகிய கடவுளிடம் சரணடைந்து, அவரையே தியானம் செய்து, குற்றங்களுக்காகக் கண்ணீர் விட்டு அழுது தண்ணீரில் திருமுழுக்குப் பெற்று கரை ஏற வேண்டும்.

9. தாய் தகப்பனை போற்ற வேண்டும். பழிவாங்குதல், மோக எண்ணங்கள் முதலான பாவங்களை நினைவிலிருந்தும் நீக்கி, இருளை அகற்ற வேண்டும்.

10. ஆறுகளிலும், குளங்களிலும் மூழ்கி ஊர் ஊராக அலைய வேண்டாம். கடவுள் பேரிலுள்ள ஆணைப்படி சொல்லுகின்றேன் திருமுழுக்குப் பெற்று மோட்ச வாழ்வைத் தேடுங்கள்

11. உலகத்தில் ஒளியாய் வந்த அவரையே வணங்குக, இந்த உலகை அவர் ஒரு நொடியில் உண்டாக்கினார். மனிதரைப் பூமியின் மண்ணினாலே உண்டாக்கினார். பின்பு இந்த உலகத்தில் குருவாக வந்து தோன்றினார். மனைவி பிள்ளைகள் என்று யாரும் இல்லாமல் சன்னியாசியாக வாழ்ந்து தவ வாழ்வை மக்களுக்கு காட்டினார். பின்னர் தம்மில் அன்பு பூண்டு ஒழுகிய சித்தர்களாகிய பன்னிரு அப்போஸ்தலர்களை உலகத்திலே தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்யுமாறு விட்டு விண்ணுலகத்திற்குச் சென்றார். அவரைச் சேர்ந்து கொள்வாயாக. சேகசோதி ஒருவனாகிய மானிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில் குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்தில் தான் உதித்த குருவாய் வந்து கனமான சமுசாரம் ஒன்று இல்லாமல் சன்னியாசிபோல் இருந்து தவத்தைக் காட்டி, அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு அகண்ட தவம் சென்றவரை அண்டுவாயே.

12. கடவுளின் திருவடிகளை ஆராதித்து வழிபடும் சித்தர்கள் சற்குருவாகிய மீட்பரைத் தேடிச் சென்று, உரிய கிரியைகள் நடப்பித்து கடவுளின் திருவடிகளில் சென்றடையச் செய்வார்கள். இந்த உலகத்தில் அத்தகைய சித்தர்கள் உண்டு அவர்களை நீ தேடுவாயாக.

13. ஆத்துமாவைக் கண்ணீரால் கழுவி அதைப்புடமிட்டு மாசு நீக்கிய காணிக்கையாகக் கடவுளுக்கு வைத்துக் கொண்டு உன் இதயத்தை ஆனந்தக் கண்ணீரால் மெழுகு.

14. பிதா குமாரன் பரிசுத்தாவி ஆகிய முச் சுடரும் ஒருவரேயாவார், அவர்கள் மும்மூர்த்திகளைப் போல் வெவ்வேறானவர்கள் அல்லர். மூவருக்கும் ஆள உருவம் ஒன்றேயாகும், திரித்துவக் கடவுள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை அரசனும் இல்லை, லிங்கமும் இல்லை, அவர் அனாதியானவர், சச்சிதானந்தர், அவரையே வணங்கி சற்குருவாகிய கிறிஸ்துவைத் தரிசித்து அவருடைய திருவடிகளில் சரணடைந்து பற்றிக்கொண்டு எச்சரிக்கையுடன் இரு அப்பொழுது எண்ணிக் கூற இயலாத முக்தி வாழ்வினை நீ அடைவாய்.

"முச்சுடரும் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும். அச்சுதா இவர்களுமே ஆண் பெண் அல்ல, அரசனுமல்ல, லிங்கமும் அல்ல, அநாதியான சச்சதானந்தனையே வணக்கம் செய்து சற்குருவைத் தரிசித்து சரண்பற்றி எச்சரிக்கை கொண்டு நட அப்பா எண்ணலா முக்தி எய்துவாயே. (8)

அம்மானை, குறவஞ்சி காவியம், கலம்பகம், நாடகம் முதலிய பல்வேறு வடிவங்களில் கிறிஸ்தவ உண்மைகள் விளக்கப்பட்டன. பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் சித்தர் பாடல்களைப் பின்பற்றி கேளப்பா என்று அவர்களின் மொழியில் கிறிஸ்தவத்தை விளக்கிய இந்த "அகத்தியர்" கிறிஸ்தவத்தை சுதேச நிலைப்படுத்தியவர்களில் மிக முக்கியமானவர்.

---

## அடிக்குறிப்புக்கள்


1. வரததராசன் . மு. — தமிழ் இலக்கிய வரலாறு சாகித்திய அக்காதெமி 1992 பக்கம் 190.
2. Subramania Aiyar A.V. — The poetry and Philosophy of the Tamil Siddhans 1957. Page 2.
3. சிங்காரவேலு முதலியார் — அபிதானா சிந்தாமணி 1899 1996ம் ஆண்டு பதிப்பு பக்கம் 638
4. K. N. Sivarajapillai — "Agastya in Tamil Land" மேற்கோள் – வித்தியானந்தன்.சு. இலக்கியத்தென்றல் 1953 பக்கம் 33

5. டாக்டர் மோசசு மைக்கல் பாரடே

தமிழ் சித்தர் பாடல்களும் விவிலியமும்
C.L.S. Madras 1999 Page 19

6. டாக்டர். வீ. ஞானசிகாமணி அகத்தியர் ஞானம் தெளிவுரை – உலக கிறிஸ்தவ தமிழ் பேரவை 1983, அறிமுகவுரை

7. "Last evening at my usual meeting at Santilipay, I had Akkuttier's 30 songs sung. He is said to be one of the most learned if not the most so of the Tamil race. The credit of being the author of the Tamil Language is ascribed to him. It is said that he is still alive in some distant country. According to report, he is one span in height, I regret very much that I did not come into possession of his songs until very lately as several of them convey sentiments strictly in unison with the doctrines we preach and as such must prove a two – edged sword. He probably derived some of his sentiments from the Jews or from their traditions. In one of these songs it is said as the devil by pride thought he must be equal with God, he was cast from the situation he held, into hell. He always deceives people and bring them down to hell. In another-after the one God had created the world, and made holy, he came into the world as a priest, he was without family, had no dwelling place, prayed, left his disciples and went to heaven. Worship him. In a third – there is a three-one God not Mummurtte (the Tamil triad). He is neither male of female, not Siva, nor Lingam, worship him. He concludes by saying I have now mentioned what happens in this world. I have said that Siva, Vishnu and Bruma are devils and etc."

Missionery Herald November 1833. Page 391

8. விளக்கவுரைகள் யாவும் டாக்டர் வி. ஞானசிகாமணி எழுதிய "அகத்தியர் ஞானம் தெளிவுரை" (1983) என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டன.

# மாட்சி பொதிந்த சிலுவை

உரோமப் பேரரசின் காலத்தில் சிலுவையில் அறையப்படுதல் மிகவும் இழிவானதும் அவமானமான தண்டனையாகவும் கருதப்பட்டது. நமதாண்டவரும் இரட்சகருமாகிய இயேசு பெருமான் எருசலேம் நகருக்குப் புறம்பே – கொல்கொதா மேட்டில் சிலுவையிலேயே அறையப்பட்டார் – மூன்றாம் நாள் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். அன்றிலிருந்து சிலுவை மக்களின் பாவங்களைப் போக்கி மனமாற்றத்தை அளிக்கும் அன்புச் சின்னமாய், நோய்களை நீக்கிப் புத்துயிர் அளிக்கும் புனிதச் சின்னமாய்த் திகழ்ந்தது – இதுவே சிலுவையின் மாட்சி.

## கிறிஸ்துவும் சிலுவையும்

கிறிஸ்து பிரானின் சிலுவையைப் பற்றிச் சிந்திக்கும் போது – மூன்று முக்கிய உண்மைகள் புலப்படுகின்றன. (1) கிறிஸ்து அன்று மக்கள் பார்வையில், குறிப்பிட்ட நாளில் சிலுவையில் அறையப்பட்ட போதிலும், அவரை அறைந்த சிலுவை – காலம் காலமாக இன்று வரை – ஒளிருஞ் சிலுவையாக மிளிர்கின்றது. (2) விண்ணகத் தந்தையின் திருவுளத்திற்கேற்ப – எம் பெருமான் சிலுவைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். (3) கிறிஸ்து தனது சிலுவை மரணத்தைத் தாமே மனமார ஏற்று இவ்வையகத்திற்குத் தான் வந்த நோக்கத்தை நிறைவேற்றி முடித்தார் என்பதே.

இயேசுநாதருக்குச் சிலுவை – மரணம் தற்செயலாக ஏற்பட்டதல்ல – அது தனக்கு அவசியம் என்பதை அவர் ஏற்கனவே, திட்டமாய் அறிந்திருந்தார். (யோ. 12:27, வச 32,33) – மேலும் ஒரு படைத் தலைவன் தன் எதிரிகளை முறியடிப்பதற்காகத் திடமனதுடன் வீரத்தோடு அவனை எதிர்கொண்டு போவது போல – ஆண்டவரும் சிலுவையை நோக்கித் திடமனதுடன் நடந்து போனார்.

தமக்கு நேரிடவிருக்கும் சிலுவை மரணம் அவர் கண்களை விட்டு விலகவில்லை, யூதர்கள் அவரைப் பகைக்க முன்னர், இயேசு சிலுவையை எதிர்பார்த்தார். அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

இயேசு பிரான், தனது மூன்று ஆண்டுக்கால ஊழியத்தில் – எந்தச் சூழ் நிலையிலும் சிலுவையை மறந்து போகவில்லை. ஆயினும் இதைப்பற்றித் தன் ஊழியத்தின் தொடக்கத்தில், மற்றவர்களோடு உரையாடவுமில்லை, சீமோன் பேதுரு தன்னை – "நீர் மெசியா" என அறிக்கை செய்த பின்னர் தான் படிப் படியாகச் சிலுவை பற்றிச் சொல்லத் தொடங்கினார்.(மாற் 8:27–33)

இயேசுநாதரின் இறுதி நாட்களைப் பற்றி நற்செய்தி நூல்கள் தரும் வரலாற்றைக் கவனிக்கும் போது – இயேசுவின் பகைவர்களே, அவரைப் பிடித்துச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்ததாகக் காணப்படுகிறது. ஆனால் இது உண்மைக்குப் புறம்பானது – சிலுவை மரணம் விண்ணகத் தந்தையின் ஏற்பாடு – கிறிஸ்து தாமாகவே சிலுவை மரத்தை ஏற்றுத் தமது பணியை நிறைவேற்றி முடித்தார் என்பதே உண்மை. (மத்.26:39, யோ 18:11)

கடவுள் ஆபிரகாமைச் சோதிப்பதற்காகத் தன் ஒரே மகன் ஈசாக்கைப் பலியிடும்படி கேட்டபொழுது – ஆபிரகாம் தன் ஒரே மகனை மனப்பூர்வமாக ஒப்புக் கொடுப்பதற்கு ஈசாக்கும் உடன்பட்டது போல – விண்ணகத் தந்தை தமது மகனை நமக்காக மனப்பூர்வமாக ஒப்புக் கொடுக்க – மகனும் மனப் பூர்வமாகத் தம்மைத் தாமே நமக்காகச் சிலுவையில் ஈந்தார். மனிதன் உண்டாவதற்கு முன்னரே – மனிதனின் மீட்பு இவ்வாறு மக்கள் சமூகத்தில் ஆயத்தமாக்கப்பட்டிருந்ததைக் காண்கிறோம். (1 பேது 1 : 20, யோ. 3:16)

"நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப் பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன்." (கலா. 6:14) சிலுவை ஒரு தூக்கு மரம் – அந்தத் தூக்கு மரத்தைக் குறித்தே பவுலடியார் பெருமை பாராட்டுகிறார். சிலுவை யூதருக்கு இடறல் – கிரேக்கருக்குப் பைத்தியம், உரோமருக்கு அருவருப்பு, – பவுலடியாருக்கோ சிலுவை பெருமைக்கும் மாட்சிமைக்கும் உரிய புனித சின்னம் – பவுலடியாரின் வாழ்க்கையில் அவர் பெருமை கொள்ளத்தக்க பல அம்சங்கள் இருந்தன. அவர் ஒரு யூதன் – அதிகச் சிறப்பு வாய்ந்த பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பக்தி வைராக்கியமுள்ள பரிசேயன் – குற்றஞ்சாட்டப்படாத நீதிமான் புகழ் பெற்ற கமாலியேலின் பாதபடியிலிருந்து கற்றவன் – உரோமக் குடியுரிமை பெற்றவர். அவர் கண்ட பரம தரிசனத்தின் வழியாக இறை அழைப்பைப் பெற்றார். (அப். 16:37, அப். 22:3)

இத்தகைய தகைமைகள் இருந்தும், இவைகளில் ஒன்றைக் குறித்தும் அவர் பெருமை கொள்ளவில்லை, இழிவான சிலுவையையே – தம் வாழ்வின்

புனித சின்னமாக, மாட்சிக்குரிய அடையாளமாகத் தேர்ந்தெடுத்தார். காரணம் என்ன? கிறிஸ்துவின் சிலுவைக்கு உலகமெங்கும் இத்துணை மகத்துவமும் மாட்சியும் வந்ததெப்படி?

## கிறிஸ்து இறந்து உயிர்ப்படைந்த பின்பே – சிலுவை புனித சின்னமாகக் கணிக்கப்பட்டது

சிலுவைச் சாவு கொடூரமமானது – வேதனை நிறைந்தது என்பது கிறிஸ்து பெருமானுக்குத் தெரியும் – ஆயினும், சிலுவைச் சாவிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென நினைத்தாரா? அதற்காக வழிவகுத்தாரா? இல்லவே இல்லை. சிலுவையை ஏற்க அவர் பின் வாங்கவில்லை. அவர் அதை மாட்சி பெற்றது என்றே ஏற்றுக் கொண்டார். (யோ.12:23) சிலுவையில் பலர் அறையப்பட்டனர் – இரண்டு கள்வர்கள் இயேசுவின் இரு மருங்கிலும் அறைப்பட்டனர். ஆயினும் ஆண்டவர் தாமாகவே சிலுவைச் சாவிற்குத் தம்மை ஒப்புக் கொடுத்தார். சிலுவை மாட்சி பெற்றது. (பிலி. 2:6–9)

## சிலுவையில் அன்பின் ஒளி ஒளிர்ந்தது

உண்மையான அன்பு சுயநலமற்றது – பிறருக்காக வாழும் – செயற்படும் – மன்னிக்கும் அன்பு – தன்னையே பிறர்நலத்திற்காக அர்ப்பணிக்கும் அன்பு – இத்தகைய அன்பின் பண்புகள் – எம் பெருமானின் வாழ்க்கையில் செறிந்து விளங்கியது. அதன் பெருக்கத்தைப் புனித சின்னமாகிய சிலுவை யிலே காண்கிறோம்.

சிலுவை வழியாக நாம் பெற்ற மீட்பு மகத்துவமானது – விலை மதிக்க முடியாதது – பவுலடியார் சிலுவையில் கண்டு கொண்ட மாட்சி, இம் மீட்பின் மாட்சியே, தமஸ்கு வழியில் இயேசுபிரான், பரம தரிசனத்தின் வழியாகத் தம்மை யார் என்பதையும் – சிலுவை வழியாக வழங்கிய மீட்பின் மகத்துவத் தையும் கண்டுணர்ந்தார்.

சிலுவையில் வெளிப்பட்ட இறைவனின் அன்பை – அளவிடக் கூடாத அன்பை, கருணையுடன் அளிக்கப்பட்ட விடுதலையையும் – அதன் விளை வாகப் பெற்ற பாவமன்னிப்பு – தூய்மையாக்கப்படுதல் – நீதிமானாக் கப்படுதல் – மகவாய் ஏற்கப்படுதல் – நிலையான வாழ்வு – முடிவில்லாத மாட்சி ஆகியவற்றைத் தம் வாழ்க்கையில் – தன் சொந்த அனுபவத்தில் கண்டு கொண்டார்.

சிலுவை வழியாக ஒப்புரவு ஏற்படுத்தப்பட்டது – அதாவது, சிலுவையின் காயப்பட்ட கரங்கள் – அனைத்து மக்களையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கும் மகத்துவத்தையும், வல்லமையையும் தெளிவாகக் காட்டுகிறது. – இறுதியில், சிலுவையில் ஆண்டவர் அடைந்த வெற்றியையும் அந்த உயிப்பின் வல்லமையையும் கண்டு கொண்டார். எனவே சிலுவை அவருக்கு நிகரற்ற மாட்சியும் மதிப்புமுள்ள சின்னமுமாயிற்று. (1பேது. 1:18–19, எபே. 2:16)

## எமது பதில்:

சிலுவையின் அழைப்பிற்கு நாம் கொடுக்கும் பதில் என்ன? திருத்தூதர்கள், கிறிஸ்துவின் அடியவர்கள் சிலுவையை – அனைத்திற்கும் நடுமையமாக நிறுத்தினர். மீட்புப் பணியின் மையம் சிலுவையே – இந்த சிலுவையின் அழைப்பிற்கு நாம் செய்ய வேண்டியது யாது?

### (1) மீட்பினை நமதாக்குவது :

மீட்பு ஆண்டவருடைய இலவச ஈவு. இலவசமான அருள் மறைவான அந்த அருள் சிலுவையில் நிறைவேறியது – அது அன்பின் தியாகத்தால் வெளியிடப்பட்டது.

விசுவாசத்தினால் அந்த மீட்பை நமதாக்குவதே நாம் கொடுக்கும் முதலாவது பதில் – மீட்பின் அனுபவம் நமது வாழ்வில் மீட்பைப் பெற்ற மாறுதல் காணப்படாவிடின் – நாம் ஆயிரம் வழிபாடுகளை நடத்தினாலும் எண்ணற்ற சமயச்சடங்குகளில் ஈடுபட்டாலும் எல்லாம் வீணாகிவிடும், பொருளற்ற வெறுஞ் சடங்காகி விடும். கிறிஸ்துவின் சிலுவை மரணம் நமக்குப் பொருளற்ற வெறும் நிகழ்வாகி விடும்.

### (2) உயிர்த்தெழுந்த ஆண்டவர்

உயிர்த்தெழுந்த ஆண்டவர் பேதுருவை நோக்கி – "யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னில் அன்பு கூருகிறாயா?" (யோவா. 21:15–17)

பேதுரு ஆண்டவருடைய சிலுவையை முதலில் புறக்கணித்தவர் – தனக்கும் சிலுவைச் சாவு ஏற்பட்டு விடுமோ எனப் பயந்தவர். ஆண்டவரை மறுதலித்தவர் – சிலுவையை ஏற்று – சாவின் மேல் வெற்றியடைந்த ஆண்டவர் – நீ என் மேல் அன்பு கூருகிறாயா? என்று கேட்டார். அதாவது தன் மேல்

முழுமையான அன்பை வைக்கும்படி ஆண்டவர் பேதுருவை அழைக்கிறார். அவருடைய சிலுவையின் அன்புக்கு அதன் அழைப்பிற்கு நாம் அளிக்கும் பதில் என்ன? அவரில் முழுமையான அன்பு வைப்பதே – நமது முழுப்பற்றுதலையும் ஆண்டவர்பால் செலுத்துவதே (லூக். 10:27) ஆகும்.

**(3) ஆண்டவரைப் பின்பற்றுதல்** – என்பது தன்னைப் பின்பற்ற விரும்பு வோருக்கு ஆண்டவர் கூறுவது – "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்." (மாற் 8:34)

இயேசு பெருமான் தன்னையே வெறுத்து தன் சிலுவையைச் சுமந்து – தன் விண்ணகத் ˊ,ந்தையின் சித்தத்தைச் செய்து முடித்தவர். நாமும், அவர் சென்ற வழியில் நம்மை நாமே வெறுத்து – நமது சிலுவையைச் சுமந்து கொண்டு தன்னைப் பின்பற்றும்படி அழைக்கின்றார்.

சிலுவையில் மரித்து உயிர்ப்படைந்து முடிவுபரியந்தம் எங்களுடன் இருக்கும் கிறிஸ்து பெருமானின் அழைப்பை ஏற்க ஆயத்தமா? சிந்தியுங்கள், செயற் படுங்கள்!


*வண. வீ. இராஜ்குமார்*
(நவாலித் திருச்சபை)

### *Which way to turn*

"There have been many times when I did not know which way to turn. But I have gone to the BIBLE, and particularly to the "NEW TESTAMENT" and have drawn strength from its message."

*- Mahatma Gandhi -*

# திருப்பணிவிடையில் பொதுநிலையினர் பங்கு



பணிகள் பலவகை, மனிதனின் செயல்பாடுகள் அனைத்துமே பணிகள் தான். இப்பணிகளை நாம் வகைப்படுத்தலாம். அவை சாதாரண பணி, திருப் பணி, சிறப்புத் திருப்பணி என்பவையே. மனிதன் சாதாரண வாழ்க்கைக்கு அதாவது உயிர்வாழ்வதற்காகச் செய்யும் பணி சாதாரண பணி. தான் தெரிந்துகொண்ட பணி தனது தாலந்துகளூடாகக் கடவுள் தந்த பணி என்றோ – அல்லது கடவுள் இப்பணிக்காகத் தன்னை அழைத்திருக்கிறார் என்று அதனை அர்ப்பணிப்போடு செய்வது திருப்பணியாகும். வழிபாட்டில் திருச்சடங்குகளைத் தக்க ஆசரிப்போடு செய்யும் பணி சிறப்புத் திருப் பணியாகும்.

சாதாரண பணியை நடப்பித்து வாழ்க்கை நடத்துபவர்கள் ஏராளம். ஆனால் திருப்பணிக்கென்று அல்லது சிறப்புத் திருப்பணிக்கென்று தங்களை அர்ப்பணம் செய்தவர்கள் மிகச் சிலர். சாதாரண பணியை நடப்பிப்பவர் களைத் திருப்பணியாளர்களாக மாற்றும் ஒரு பொறுப்பு உண்டு. சாதாரண பணியை ஏற்றிருப்பவர்கள் அதனைப் பிழைப்புக்காகச் செய்பவர்கள் அப் பணியில் நேரம் அளவு என்ற வரையறையுண்டு. அத்துடன், அதற்கான ஊதியம் உண்டு. நேரம், அளவு, ஊதியம் வரையறுக்கப்படும் போது அங்கே கடவுளின் அழைப்பு உண்டு – என்ற நிலை தவிர்க்கப்படுகிறது. இதனால் மனிதனின் தாலந்துகள் மறைக்கப்படுகின்றன. அத்துடன், மனிதனின் இறை பக்தி வெறும் நடிப்பாக மாற்றம் பெறுகிறது.

இறைபக்தி பூரணப்படும்போது, கடவுளின் அழைப்பு ஒன்று உண்டு, அது தாலந்தினால் வெளிப்படுகிறது என்ற உண்மையை மனிதன் புரிந்து கொள்வான். அந்தப் புரிந்து கொள்ளுதலுடன் அர்ப்பணித்துப் பணியாற்று வது திருப்பணியாகும். சாதாரண பணியிலிருந்து புத்தெழுச்சி பெறுதல் திருப்பணியாகும். கடவுளின் அழைப்பும், அர்ப்பணிப்பான பணியும் திருப் பணியின் மகிமையை விளங்கச் செய்யும். திருப்பணியாளரின் அழைப்பும் அர்ப்பணமும் சாதாரண பணியாளனின் சாட்சியாக மாற வேண்டும்.

இதனால் சாதாரண பணியானது மாற்றம் பெற்று திருப்பணியாக மாற வேண்டும். இது சமுதாயத்தில் முன்னெடுக்க வேண்டிய சவாலாகும்.

இந்த சவாலினைப் புரிந்து கொண்ட திருப்பணிவிடையாளன், திருமறை அறிவினை வளர்த்து அன்மீக வல்லமையினால் உரமூட்டப்பட வேண்டும். சாதாரண பணியினை நடப்பிப்பவரைத் திருப்பணியாளராக மாற்ற வேண்டும். இதற்கான வல்லமையை உலகம் தரும் வல்லமையில் காணமுடியாது. இறை வல்லமையினால் (ஆன்மீக வல்லமையினால்) மாத்திரம் காணமுடியும். நேரம், அளவு, ஊதியம் என்பன முன்வைக்கப்படாமல், தேவையை நிரப்பிச் செய்யும் பணி – இறை வல்லமையினால் செய்யப்படும் பணியாகும். பெற்ற தாலந்துகளை உயர்த்தி அதன் மதிப்பை மக்களுக்கு விளங்கச் செய்வதும் திருப்பணியில் விளங்கும்: திருப்பணிவிடையில், அர்ப்பணம் அவரது இறை விசுவாசத்தினைத் தோற்றுவிக்கும். அர்ப்பணிப்பின் பணி எதிர்ப்புக்களை மேற்கொண்டு செல்லும் பணியாகும். இதனால் தான், கிறிஸ்து இப்பணி சிலுவையைச் சுமந்து செல்லும் பணி என்று – சீஷத்துவம் பற்றிக்கூறும் போது குறிப்பிடுகிறார். திருப்பணிவிடை துன்பத்தினூடாக இன்பம் காணும் பணியாகும். சாதாரண பணி திருப்பணி விடையாக மாற வேண்டியது உண்மை. ஆனால் திருப்பணிவிடை சிறப்புத் திருப்பணிவிடையாக மாற்றம் பெற வேண்டியதில்லை. சிறப்புத் திருப்பணிவிடையும் திருப்பணிவிடையும் ஒரே அளவுகோலால் அளக்கப்படுவனவாகும். இத்திருப்பணிவிடைகளில் கடவுளின் அழைப்பை உணர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே அந்த அளவுகோலாகும்.

திருப்பணிவிடையாற்றுவதில் பலபடிமுறைகள் உண்டு. இவைகள் பழைய ஏற்பாட்டுக் காலந்தொட்டு இருந்து வருகிறது. மோசேயின் அழைப்பினூடாக சிறப்புத் திருப்பணி பற்றி அறிகிறோம். மோசேயினூடாக கற்பனை உடன் படிக்கை மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. அக்கற்பனைகள் மக்கள் மத்தியில் ஆசரிக்கப்படுவதற்கு லேவியின் கோத்திரத்தினர் ஆசாரியர்களாக்கப் பட்டனர். இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு – உடன் படிக்கையினையும் கடவுளால் பெற்றுக்கொண்ட மோசே, லேவியின் கோத்திரத்தை சேர்ந்தவர். எனவே, லேவியின் கோத்திரத்தார் ஆசாரியர் பணிக்காகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். ஆசாரியர்களாகத் திருநிலைப்படுத்தப் பட்ட பணி ஒன்று முக்கியத்துவம் பெறுகிறது. இவர்கள் உடன்படிக்கையின் திருச்சடங்குகளை ஆசாரத்துடன் நடப்பிப்பவர்கள். இப்பணியினை ஏற்றுத் திருநிலைப்படுத்திப் பணியாற்றுபவர்கள் சிறப்புத் திருப்பணிவிடையாளர் என அழைக்கப்படுகிறார்கள்.

இதே சிறப்புத் திருப்பணிவிடை புதிய ஏற்பாட்டிலும் விளங்குகிறது. அத்துடன் படி முறைகள் மூலம் வெவ்வேறுபட்ட பணிகளின் தேவைகள் புலனாகிறது. இயேசுக் கிறிஸ்துவின் மூலம் ஆசாரியப்பணி முக்கியத்துவம் பெறுகிறது. அவர் பிதாவாகிய இறைவனுடன் மனுக்குலத்தைத் தொடர்பு படுத்துகிறவர். (யோவா. 17:20–23) இதில் காணப்படுகிற ஒருமைப்பாட்டு ஜெபம், இதனை நன்கு விளக்குகிறது. அவரது சிலுவை மரணம் மூலம் உயிர்ப்பலியை முடிவுக்குக் கொணர்ந்தார், பலிப்பொருளானார், இரத்தம் சிந்தினார். அத்துடன் அவரே அப்பலியின் ஆசாரியராகவும் விளங்கினார். ஆசாரியத்துவம், சீஷத்துவம் பற்றிப் போதனையினால் விளக்கப்படுகிறது. (மாற்கு 8:34) மேலும் கிறிஸ்து இயேசு உடன்படிக்கையின் மூலம் ஏற்படுத்திய அன்பின் விருந்து, சகல ஜாதிகளையும் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்தல், ஆகிய சாக்கிரமெந்துகளை நடத்துதல், மற்றும் பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்ட மேய்ப்புப்பணியை தொடர்தல் போன்ற பணிகளும் சிறப்புத் திருப்பணிவிடையாகும். இந்த ஆசாரியப்பணிகளாக சிறப்புத் திருப்பணி விடையாற்ற திருநிலைப்படுத்தப்படுபவர்கள் மேய்ப்பர்களாகவும், உதவிக் காரர்களாகவும் ஏற்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் ஒரு குறித்த பணிக்காக பிரத்தியேகப்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் கடவுளின் சிறப்புத் திருப்பணி விடைக்கு அழைப்பைப் பெற்றவர்களாகவும் அதேவேளை மக்களினாலும் பிரத்தியேகப்படுத்தப்பட்டவர்களாகவும் கருதப்படுவர். இத் திருநிலைப்படுத் தப்பட்டவர்கள் சிறப்புத் திருப்பணிவிடையாளர் என்றும் திருநிலைப்படுத்தப் படாதவர்கள் திருப்பணிவிடையாளர் என்றும், பொதுநிலையாளர் என்றும் அழைக்கப்படுவர். திருப்பணிவிடையாளர், சிறப்புத் திருப்பணிவிடையாளர் களின் பணியினை நன்கு அறிந்திருப்பதால் அதற்கு வேண்டிய மதிப் பளிப்பர். சிறப்புத் திருப்பணியாளர்களின் பணிக்கு உதவியும் ஒத்தாசையும் உடையவராகக் காணப்படுவர்.

திருப்பணிவிடையாளரானாலும் சரி, சிறப்புத் திருப்பணி விடையாளரானா லும் சரி, அவர்கள் கடவுளின் அன்பையும், அழைப்பையும் உணராதவர்களா னால், அதனால் பலன் ஏதும் இல்லை. சிற்பபுத் திருப்பணிவிடையினை மறுப்பது கிறிஸ்து தந்த சாக்கிரமெந்தையும் அவரது ஆசாரியத்துவத்தை யும், மீட்பையும் மறுப்பதாகும். திருப்பணிகள் அர்த்தத்துடன் சிறப்படையும் போது உயிர்த்தெழுதல் வாழும் வரலாறாகும். அழைப்பினை உணர்ந்து அர்ப்பணிப்போடு பணியாற்றுவதே எம் கடமை.

*வண. வி. என் . தர்மகுலசிங்கம்*

# குழந்தை இறையியல் ஓர் அறிமுகம்

## முன்னுரை

இறை, மானிட – உலக தொடர்பை, உறவை செயற்பாடுகளை முறைப் படுத்திச் சிந்திப்பது இறையியல் எனலாம். இதில் இயேசு கிறிஸ்து மைய மேற்கோள் பெறும் போது அது கிறிஸ்தவ இறையியல் ஆகிறது. இன்று உலக அளவில் பலவிதமான கிறிஸ்தவ இறையியல் கருத்துக்கள் உருவாகி யுள்ளன. அவை தனியாள் சார்ந்ததாகவும் இருக்கிறது. இவ்வாறு உருவாகும் கோட்பாட்டு இறையியல், விடுதலை இறையியல், கறுப்பர் இறையியல், பெண் இறையியல், மக்கள் இறையியல், தலித் இறையியல், இந்திய கிறிஸ்தவ இறையியல் என்பனவாகும். யாழ்ப்பாணத்தில் அண்மையில் உருவான சிந்தனையின் அடிப்படையில் எமது சூழலுக்கென இறையியல் உருவாக வேண்டும். அது பனை மரத்தை சார்ந்து இருக்க வேண்டும். ஆகவே பனை மர இறையியல் என அழைக்கப்படும்.

இப்பேற்பட்ட எல்லா இறையியல் கோட்பாடு உருவாகுவதற்கும் காரணமாக அமைபவர்களில் குழந்தைகள், சிறார்கள் முக்கிய இடத்தை வகிக்கின்ற னர். அவர்கள் பல வேளைகளிலும் பேசாது இருந்தாலும் அவர்களின் பங்களிப்பு விடுதலை வாழ்வில் சிறப்பிடத்தைப் பெறுகின்றது. இந்தக் குழு வினரைப் பற்றிச் சிறிது ஆராய்ந்து படிப்போம்.

கிறிஸ்தவ இறையியல் வரலாற்றில் இதுவரை குழந்தை அல்லது சிறார்கள் இரண்டு விதங்களில் மட்டும் முக்கியம் பெற்றுள்ளார்கள்.

(01) குழந்தைகள் பாவத்தில் உற்பத்தியாகிறார்கள், சங். 51:5 என்ற கருத்தை யூதர்கள் அதிகம் விவாதித்தார்கள்.

(02) கட்டுப்பாட்டுடன் குழந்தைகளை வளர்த்து அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

சிறார்கள் என்று குறிப்பிடும் போது எந்த வயதினரை நாம் மனதில் கொள்கிறோம். 1989ல் சட்டம் இயற்றிய ஐக்கிய நாடுகள் சபை 18 வயதிற்

குட்பட்ட அனைவரையும் பிள்ளைகள் / சிறார்கள் என்று வரையறுத்தனர். ஆனால் 1986ல் இந்திய அரசு சிறுவர் வேலை பற்றி விவாதித்த போது 15 வயதிற்குட்பட்ட அனைவரையும் சிறார்கள் என வரையறுத்தார்கள். குழந்தை அல்லது சிறார் என்பதைக் குறிக்க பழைய ஏற்பாட்டில் 12 எபிரேய வார்த்தைகளும், புதிய ஏற்பாட்டில் 13 கிரேக்க வார்த்தைகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டில் பயன்படும் சொற்களான – நெப்பி யாஸ், பைஸ் பைடியான், டெக்னான், ஹையாஸ் என்பனவாகும். நெப்பியாஸ் என்ற சொல் பழைய ஏற்பாட்டு கிரேக்க திருமறையில் – செப்துலஜிந்துலில் (எசா. 11:8, 1 சாமு. 11:8, எசே. 9,6, நீதி. 22:13 முதலிய இடங்களில்) பயன் படுகின்றது.

## சமூக நிலை:

சமூகத்தில் இருக்கும் குழந்தைகள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள். குறிப்பாக பொருளாதாரத்தால் பின் தங்கிய குடும்பங்களில் அல்லது சாதி என்ற சமூக அமைப்பில் பின் தள்ளப்பட்ட குடும்பங்களில் இருக்கும் குழந்தைகள் உளவியல் அடிப்படையிலும், பொருளாதார அடிப் படையிலும் ஒடுக்கப்படுவதைக் காணலாம். 1979ம் ஆண்டு அனைத்துலக குழந்தைகள் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டில் அவர்களின் நிலையை, அனுபவிக்கும் கொடுமைகளைச் சுட்டிக் காட்டப்பட்டது. வறுமை, கைவிடப்பட்ட நிலை போன்றவற்றால் சிறார்கள் வீதிகளிலும், வயல்களிலும் உணவு விடுதிகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்து, இளமை யின் மகிழ்வையும் கல்விக்கான வாய்ப்பையும் இழந்து நிற்கும் நிலை நமக்கு பெரும் அறைகூவலாக இருக்கின்றது. விபச்சாரத் தொழிலில் கூட சிறார் கள் ஈடுபடுத்தப்படுவது எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கிறது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நடைபெறும் ஆயுதப் போராட்டங்களில் கூட சிறார்கள் பயன்படுத்தப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

நமது அண்மை நாடாகிய இந்தியாவில்தான் சிறார்களை வேலைகளில் அமர்த்தும் பழக்கம் அதிகமாக உள்ளது. இவர்கள் வேலை செய்யும் இட நிலை பரிதாபமானது. மிகக் குறைந்த கூலிகளைக் கொடுத்து அதிக வேலையை வாங்கும் பழக்கம் மலிந்து காணப்படுகின்றது. இவர்கள் யாவரும் ஒருங்கிணைக்கப்படாத கூலிகள். ஐக்கிய நாடுகளின் குழந்தைகள்/ சிறார்கள் நலநிதி போன்ற பல அமைப்புக்கள் இருந்தும் அதற்கூடாக சட்டங்கள் பல வகுத்தும் கட்டப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இச்சட்டங்களுக்குள்ளேயும் பல ஓட்டைகள் இருப்பதினால், சட்டத்தை

உருவாக்குபவர்களோ அல்லது ஒடுக்குபவர்களோ அதற்குள் அகப்படாமல் தப்பித்துக் கொள்கிறார்கள்.

மானிட உயிர்களில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண் குழந்தைகளாவர். பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகளை விட வலிமையுள்ளவராக இருந்தபோதும், நம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் பெண் குழந்தைகளின் இறப்பு வீதம் அதிகமாக உள்ளது. இந்த இன அழிப்பிற்கு காரணம் என்ன என ஆராயும் போது பின்வரும் காரணங்கள் வெளிப்படுகின்றன.

(01) பிறப்பது பெண் குழந்தையாயின் உடனே கொன்று விடும் கொடுஞ் செயல் காணப்படுகின்றது.

(02) கருவிலேயே பரிசோதனை மூலம் அறிந்து கருக்கலைப்பதன் மூலம் இறப்பு வீதம் அதிகரிக்கின்றது.

(03) பெண் குழந்தைகளானால் போதிய அளவு பாதுகாப்பு அளிக்காத தினாலும், பேணப்படாது கைவிடப்படுவதினாலும்,

(04) ஆரம்ப கல்வியுடன் பெண்கள் பாடசாலைக்கு அனுப்பாமல் உரிமை களை நிராகரித்தல்

(05) குறைந்த கூலிக்கு கூடுதல் வேலை செய்தல்

(06) வேலை செய்யும் இடங்களில் கற்பழிப்பு உட்பட பல கொடுமைகள்

## இயேசுவின் பார்வையில் குழந்தை

இயேசு கிறிஸ்து குழந்தைகளுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை அன்றைய கிரேக்க உரோம யூத சூழலின் ஒளியில் புரிந்து கொள்வது சிறப்பானது. கிரேக்க, உரோம உலகிலும் பெண் குழந்தைகளைக் கொன்று விடுதல், ஊனமுற்ற குழந்தைகளை அழித்துவிடுதல், குழந்தைகளை ஊனராக்கி அவர்களின் பேரில் பிச்சை கேட்டல், பொழுது போக்கிற்குரிய கருவிகளாக குழந்தைகளைப் பயன்படுத்துதல், வழிபாட்டிலும், மந்திரவாதங்களிலும் ஈனத்தனமாக குழந்தைகளைப் பயன்படுத்துதல் போன்றன காணப்பட்டன. யூதர்களிடையே சற்று மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டது பலுகிப் பெருகு தல், இறையாசி (ஆதி. 1:28) பிள்ளைகள் ஆண்டவரின் அருள்வரங்கள் (சங். 127:3,5) உடன்படிக்கையில் குழந்தைகளும் உள்ளடங்குவர் (ஆதி. 9:9, 17:9) முதலிய கருத்துக்கள் காணப்படுகின்றன. மேலும் எதிரிகளுக்குரிய சாபமொழிகளில் குழந்தைகளைக் கல்வி மோதியடிப்பது கூறப்பட்டுள்ளது. (சங். 137:9, எசா 13:16) குழந்தைகள் மிருதுவானதாகவும் மதிக்கப்படக் கூடியதாகவும் எண்ணப்பட்ட நிலை மாறிவிட்டது. கீழ்த்தரமாக மதிக்கும் நிலை காணப்பட்டது.

ஆனால் இயேசு கிறிஸ்து குழந்தைகளுக்கு கொடுத்த முக்கியத்தும் தனித்துவமானது. ஆதித் திருச்சபையில் குழந்தைகள், பெண்கள் குறைவாக மதிக்கப்பட்டனர். யூத எண்ணத்திலிருந்து முற்றிலும் விடுபட முடியாது பவுல் குழந்தைகளை பெற்றோருக்கு கீழ்படியுங்கள் என்று கூறினார். (எபே. 6:1–3) அன்பிற்கு நேராக வளர்ச்சியடையாத நிலை, உறுதியற்ற நிலை, அறிவில் தேறாத நிலை உலக போக்குகளுக்கு ஒவ்வாத நிலை போன்ற நிலையிலுள் ளவர்களையும் குழந்தைகள் என்று குறிப்பிடுகின்றனர்.

## குழந்தைகளில் வெளிப்படும் இறைவன்

இந்திய சமய மரபில், தமிழ் மரபில் குழந்தையாக கடவுள் மதிக்கப்படுகின்றார். சனத் குமரன், பாலமுருகன், பாலகிருஷ்ணன், பிள்ளையார், மணி கண்டன் போன்றன இச்சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. கடவுளை குழந்தையாக கண்டு வெளிப்படுத்தும் போக்கு திருமறையில் இல்லை. ஆனால் குழந்தைக்குரிய உரிமைகள் மறுக்கப்படும் போது இயேசு பேசாது இருக்கவில்லை. தனது வாழ்வின் மூலம் குழந்தைகளுக்கான உரிமையை எடுத்துக் கொடுத்தார். இறைவனுக்கும் கிறிஸ்துவுக்கும் பிரதிநிதியாக குழந்தையை வைத்தது மிகவும் வியப்புக்குரியது. இது மாற் 9:36 வசனத்தில் குறிப்பிடும் போது இயேசு ஒரு சிறு பிள்ளையை நடுவே நிறுத்தி "இப்படிப் பட்ட சிறுபிள்ளைகளில் ஒன்றை என் பெயரில் எற்றுக் கொள்வோன் என்னை ஏற்றுக் கொள்கிறான்" என்ற வாக்கியம் இதைத் தெளிவாகக் காட்டுகிறது. குழந்தைகள் எத்துணைக் கனிவுடன் மதிப்புடன் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பதையும், கடவுள் குழந்தையுடன் எவ்வாறு ஒன்றுபடுத்தினார் என்பதையும் இப்பகுதி தெளிவாக விளக்கு கிறது. இறைவனை சர்வாதிகாரம் நிறைந்தவராக பேராற்றல் உடையவராகப் பார்க்க விரும்புவோர் பலவீனமான குழந்தையாக நினைப்பது கடினமாக இருக்கும் என நம்புகிறேன். உடன் நடக்கும் உற்றனாகத் துன்பத்தில் பகிர்ந்து கொள்பவராக இறைவனைக் காணும் போது வாழ்க்கை புதுப் பொருள் அடைகிறது. நற்செய்தியின் பரிமாணம் மாறுகின்றது.

## குழந்தைகளின் இறையரசு

இறையரசு தொடர்பாக குழந்தைகளைப் பற்றி எண்ணும் போது இருவித உண்மைகள் புலனாகின்றது.

(01) மெசிய அரசு பற்றிய காட்சியில் குழந்தைகளின் இடம்

(02) இயல்பாகவே இறையரசின் குடிமக்களாக குழந்தைகள் ஏற்கப்படுதல்.

ஈசாவின் அடி மரத்துளிராக மெசியா குறிப்பிடப்படுகிறார் (எசா 11:1) அவர் ஆட்சியில் கொடிய விலங்கினங்களை ஒரு சிறுவன் நடத்திக் கொண்டு செல்வான் (எசா 11:6) சிறார்கள் எல்லாவகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வராக கருதப்படுவர். குழந்தைகள் இல்லாத மெசியா அல்லது இறையரசை திருமறை பேசவில்லை. வைதிக யூதரின் மனப்போக்கைப் பிரதிபலித்த சீடர்கள் சிறார்களை தடுத்தனர். ஆனால் இயேசு அவர்களை தடுத்து நிறுத்தாதிருங்கள் என்று கூறுவது மட்டுமல்ல, வளர்ச்சி, அறிவுப் பெருக் கம், சடங்குத் தூய்மை முதலியன இறையரசை உருவாக்க வழிவகுக்கும் என்ற யூத எண்ணம் மறுக்கப்படுகின்றது. சிறுபிள்ளையைப் போல் இறையரசை ஏற்றுக் கொள்ளாத எவனும் அதில் நுழைவதில்லை. (மாற் 10:5) என்பது சிறுபிள்ளைகள் பால் இயேசு அன்புக்கரங்கள் நீட்டினார் என்பது தெளிவு. இங்கு சிறுபிள்ளை ஏற்பது போல என்று குறிப்பிடும் போது உடலளவில் சிறார்களை மட்டுமல்ல, அன்புக்கும் உணவிற்கும் ஏங்கும் மக்களை சிறார்கள் என குறிப்பிடுகிறார் என்பதே பொருத்தம். சிறார்கள் மட்டுமல்ல, சிறார்களாக உருவகிக்கும் மக்களும் இதில் அடங்குவர். தந்தையே நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் இவைகளை மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தியதால் உம்மை துதிக்கிறேன் என்பதில் இயேசு ஏழைகளையும், பலவீனரையும் அல்லது அத்தகைய தம் சீடரையும் உருவகிக் கின்றனர். இந்தச் சிறியவர் என்று குறிப்பிடும் போது வலுவிழந்து, சிறு பான்மையினராக இருந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் (மத். 18:5, லூக். 12:32) முழுக்க முழுக்க இறைவனையும் பிறரையும் சார்ந்து வாழ்ந்தோரைக் குறிக் கின்றது.

சிறார்களுக்கு கற்றுக் கொடுப்பது மட்டுமல்ல மாறாக சிறார்களிடமிருந்து கற்றுக் கொள்வது அனேகம் உண்டு. இயேசுவும் சிறுபிள்ளை நடுவே நிறுத்தி என்று குறிப்பிடும் போது அவரிடம் இருந்து கற்றுக் கொண்டார் என்பதனை செயல்வடிவில் தந்துள்ளார்.

மறுபடி பிறத்தல் என்பது குழந்தைகளோடு தொடர்புடையது இங்கு புரட்சி கரமான மாற்றத்தை இயேசு சுட்டிக் காட்டுகிறார். 1 பேது 2:3 உள்ளபடி நீங்கள் வளரும்படி புதியதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமா கிய களங்கமற்ற ஞானப்பாலின் மேல் வேட்கையுடையவராயிருங்கள். இங்கு பேதுருவின் செய்தியில் இருந்து நாம் பிறந்து பிறந்து வளர்கிறோம், வளர்ந்து வளர்ந்து பிறக்கிறோம். இதுவே கிறிஸ்தவ ஆன்மீக நிலைக்கு இலக்கணமாக அமைகின்றது.

## முடிவுரை

இக்கட்டுரை குழந்தை பற்றிய இறையியலை உருவாக்கப் போதுமான சான்றுகள் அளித்துள்ளன என்று கூறமுடியாது, ஆனாலும் சிறார்கள் அல்லது குழந்தைகள் இறையரசின் தகவுகளைப் பிரதிபலிக்கின்றார்கள் என்பதை மட்டும் கூற விரும்புகிறேன். குழந்தைகளை வாழ்வின் சின்னங்களாக மதித்து, சமமாக நடாத்திப் பல்வேறு அழிவுகளிலிருந்து அவர்களைக் காப்பது நமது கடமையாகும். குடும்பங்களில் அவர்களைப் பாதுகாத்து வளர்க்கும் போது தவிர்க்கப்பட வேண்டியவை சிலவாகும். சிறு குழந்தைகளைப் பணியாட்களாக மட்டும் பார்க்காமல் தரக்குறைவான அடைமொழிகளால் அழையாது அவர்களின் ஆக்கத்துடிப்புகளை கட்டப் படுத்துவது போன்றனவாகும். நாமும் குழந்தை மனங்களைப் புரிந்து நம்மை அவர்களோடு இணைந்து ஒன்றுபடுத்தி வாழுதல் பயனுடையதாகும். அதுவே இறை சித்தமுமாகும்.

*வண. ரி. தேவநேசன்*

### *Guidelines to leaders*

Be civil to all,
Sociable to many,
Familiar with few,
Friend to One,
Enemy to none,
Be as firm as a rock
When tempted to sin,
And as calm as a clock,
When troubles begin.

*- Anonymous -*

# பனைமர இறையியல் பற்றிய சிந்தனைத் துளிகள்

## (TAMIL PEOPLES' THEOLOGICAL REFLECTIONS)

கிறிஸ்தவ இறையியற் சிந்தனைகள் – காலங்காலமாக நாட்டின் சூழமைவுக் கேற்ப தோன்றி – நாட்டு மக்களுக்கு அமைதியையும் எதிர்நோக்கையும் ஏற்படுத்தி வருகிறது. இந்த வகையில், விடுதலை இறையியல், பெண் ணுரிமை இறையியல், கறுப்பு இறையியல், தலித் இறையியல் போன்ற பல இறையியல் இயக்கங்கள் தோன்றி – அடக்கி ஒடுக்கப்பட்டு, மனித உரிமைகள் பறிக்கப்பட்டு – சுதந்திரமின்றி அடிமைகளாகத் தவிக்கும் மக்களுக்கு மனவுறுதியையும் திடமான விசுவாசத்தையும் புத்தெழுச்சியை யும் அளித்து வருவதை – உலகெங்கும், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் காண்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் கடந்த பதினேழு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெறும் இனக்கலவரங்கள், உள்நாட்டுப் போர் ஆகியவற்றின் விளைவாகத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் சொல்லொணாத் துன்பங்கள், இழப்புக்கள், சீர்குலைவுகள், மக்களின் உயிர்ப்புச் சக்தியை உறுஞ்சியெடுத்து 'உலர்ந்த எலும்புகளைப் போல்' ஆக்கியிருப்பதை நாம் காண்கின்றோம்.

இத்தகைய சூழ்நிலையில் அகப்பட்டு, திக்கு திசை தெரியாது அல்லலுற்று அலையும் மக்களுக்கு ஏற்ற முறையில் நற்செய்தி வழங்க வேண்டுமெனத் தூய ஆவியாரின் தூண்டுதலினால் ஒன்று கூடி சில சமயத் தொண்டர்கள் ஆழமாகச் சிந்தித்ததின் விளைவாக – பனைமரத்தைச் சார்ந்த இறையியல் உருவாக்க வேண்டுமென உந்தப்பட்டனர். இதன் விளைவே இக் கட்டுரை எழுத என்னைத் தூண்டியது.

கிறிஸ்தவ இறையியல் – இறைவன் இவ்வுலகில் ஆற்றிவரும் செயல்களை வேதத்தின் அடிப்படையில் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு – சொல்

வடிவத்தில் மக்களுக்கு விளக்கும் செயல்பாடே. – கிறிஸ்தவ இறையியலை திருச்சபையின் அருட்பணியிலிருந்து வேறுபடுத்த முடியாது. ஆகவே, இந்தக் கருத்துடன் பனை மரத்தைப் பற்றிய சில விவரங்களை அறிந்து – இவற்றினூடாக இறைவன் நமக்களிக்கும் இறையியற் செய்தி என்ன என்பதை ஆராய வேண்டும்.

பனை மரங்கள் – நமது நாட்டில், குறிப்பாகத் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. – உருவத்தால் மிக நீண்டு பருத்திருப்பினும், இனரீதியாக "புல்" என்பதே பெரியோர் துணிபு. ஆயினும் பிற்காலத்தில் பெரும்பான்மையோர் இதனைப் "பனைமரம்" என்றே பல விடங்களில் கையாளுகின்றனர்.

தேவர் உலகத்தோர் துய்க்கும் 'கற்பகத் தருவை' – அதாவது தேவருலகினுள்ளோர்க்கு விரும்பிய பொருட்களெல்லாம் கொடுத்து உதவு வதைப் போன்று – இவ்வையகத்திலுள்ளோர் துய்க்கப் "பனைமரத்தை" இறைவன் அருளினர் என்பது பெரியோர் துணிபு.

பனைமரம், தென்னை முதலியவைகளைப் போன்று – எருவிடல், நீர் பாய்ச்சல்கள் இன்றித் தானாகவே வளருந் தன்மையை நோக்கின் – என்னே! இறைவனின் அதிசயம்! என மக்கள் வியந்து போற்றுகின்றனர். பனங்கொட்டையிலிருந்து ஏறக்குறைய எட்டு மாதங்களில் முளை தோன்றி – ஓராண்டு கழிந்த பின் வடலியாக வளர்ந்து – 12ம் அல்லது 15ம் ஆண்டு களில் நற்பயனைத் தரும் "பனையும் பெண்ணும் பன்னிரண்டாண்டிற் பயன்" என்னும் முதுமொழியைச் சிந்திப்பது நல்லது. – ஏறக்குறைய 60 அடி உயர்ந்து வளரும் தன்மையுடைத்தது இம்மரம்.

பனையினடியிலிருந்து கற்றையாக நிலத்துட் செல்லும் வேர் – 200 யாருக்கு மேற்படச் சென்று, களி மண்ணையும் கற்களையும் ஊடுருவிச் சென்று தங்களுக்கு வேண்டிய சத்து உணவுகளை உண்ணுதலோடு – நெடுங்காலத் திற்கு உயிர்வாழக் கூடியதான தன்மையையும் நுகர்கின்றது. – கீழ் நோக்கிச் செல்லும் வேர்கள், நிலத்தினது பண்பிற்கேற்ப வயிரக்கற்களையும் ஊடுருவிச் சென்று, தண்ணீராகிய நுண்ணுணவையும், அதிற் சேர்ந்துள்ள வாயுக்கள் சிலவற்றையும், தேவையான உப்புச் சத்துக்களையும் நுகரும்.

இக் காரணத்தினாலேயே வறண்ட நிலத்திலாயினும் பனை இலகுவில் படுதல் அருமை (உறுதியான விசுவாசமுள்ளவர்கள் மரித்தாலும் பிழைப்

பார்கள் – சோர்ந்து வாடமாட்டார்கள் – சிந்தியுங்கள்!) – இதனால் தான் மிக்க நீண்ட காலத்திற்கும் உயிருடன் பனை நிலைக்கும்.

பனையானது அடியிலிருந்து முடிவரை நற்பயனைத் தந்துதவும். – பனைவேர், கங்குமட்டை, பனை ஓலை, ஈக்கு, பனை மட்டை, பன்னாடை, நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு, கள்ளு, பதநீர் ஆகியவை மக்களின் வாழ்க்கைக்கு அதிக பயனள்ளதாயுளது.

கற்பக விருட்சமாகிய பனை மரத்தின் பொருட்களை நல்ல முறையில் பயன்படுத்தினால் – பிற நாட்டவர்கட்குக் கீழ்ப்பட்டு வாழும் இழிதகை மையை நீக்க உதவும். நமது நாட்டிலுள்ள நற்பொருளை வளம்படுத்தி உண்பதே தகுதி – பிறநாட்டை நோக்கிக் கையேந்தும் அடிமைநிலை நீங்க வேண்டும்.

உயர்தர இலக்கியங்களிலும் நன்நூல் முதலிய இலக்கண நூல்களிலும் பனையின் பெருமையை உதாரணமாகவும், உவமையாகவும் கையாள்வதைக் காணலாம். – தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் – ஒருவன் பெற்ற நன்றி தினைத் துணையெனினும், பனைத் துணையாக கொள்ளலே செய் நன்றியறிதலின் பேறு என்பதனை,

"தினைத்துணை நன்றி செய்யினும் பனைத் துணையாக்
கொள்வர் பயன்தெரிவர்"

என்று கூறியது பனையின் பருமன் பற்றியன்று – மக்களுக்குப் பயனளிப் பதினால் – பனை தினையிலும் எவ்வளவு கூடிய பங்கை அளிக்கும் என்பதே இதன் பொருள்.

அன்பர்களே, கிறிஸ்தவ இறையியல் சிந்தனை – இன்று நாம் வாழும் சூழ் நிலைக்கேற்ப, இறை செய்தியை பனைமரத்தின் விவரங்கள் அளிக்கும் என்பதே எமது நம்பிக்கை. இதனை வாசித்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள். ஒரு குறிப்பிட்ட சூழலுக்குரிய இறையியல் – அந்தச் சூழலில் உள்ள மக்களாலேயே உருவாக்கப்பட வேண்டும். இதற்கு துணையாயிருப் பவர் தூய ஆவியார். ஆகவே ஆழமாகச் சிந்தியுங்கள், உங்கள் சிந்தனை களை எழுத்து வடிவத்தில் அனுப்புங்கள்.

*வண. ஏ. எஸ். ரி. ஆனந்தன்*
(உடுவில் திருச்சபை)

# சிலுவையின் பாதை



கிறிஸ்தவ நற்செய்தியின் நடுநாயகமாக விளங்குவது சிலுவை. சிலுவையில் இயேசு பெருமான் அறையப்பட்ட நிகழ்வில், பொதிந்துள்ள ஆழந்த கருத்தை நாம் சிந்திக்கும் போது – சிலுவை காட்டும் வழி உயிர்ப்பு வழியென நமக்குத்தென்படும். தூய ஆவியார் இதனை நமக்குத் தெளிவாகக் காட்டுவார்.

மக்கள் பாவத்தில் அழியாமல், நிலைவாழ்வு பெறும் பொருட்டு இறைவன் தம் ஒரே மகனை அளிக்கும் அளவுக்கு இவ்வுலகின் மேல் அன்பு கூர்ந்தார் (யோவா. 3:16), இயேசு பெருமான் நம்மீது கொண்ட அன்பின் பொருட்டுத் தம்மையே தியாகஞ் செய்து – உயிர்த்த காட்சியை நோக்கும் போது இறைவனுக்கு விரோதமாகப் பாவஞ் செய்பவன் இவ்வாறே தன்னில் அன்புகூருகிற ஆண்டவனை வதைத்து, மனம் உடையச் செய்கிறான் என்பதையும் – தன் பாவத்தின் விளைவையும் சிலுவையில் அவன் காண முடிகிறது. இதைத் தான் ஒரு பக்தன் –

‘என் அருள் நாதா, இயேசுவே
சிலுவைக் காட்சி பார்க்கையில் –
பூலோக மேன்மை நட்டமே,
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்’

என்று பக்தி ததும்பப் பாடுகிறார்.

மனிதன் – தன்னைத் தேடி மீட்க வந்த, தாயின் மிக்க அன்புள்ள மீட்பரைத் தன் பாவத்தினால் சிலுவையில் அறைகிறான் என்ற காட்சியை – பாவமற்ற இயேசு – தம் மரணத்தின் வழியாகக் காட்டுகிறார்.

அவமானச் சின்னமாக – மரண தண்டனை வழங்கும் தூக்கு மரமாகப் பயன்படுத்தப்பட்ட சிலுவை, இப்போ தாங்கொணாத் துயரத்தில் ஆழ்ந்து, தத்தளிக்கும் பலருக்கு ஆறுதல் வழங்கும் அன்புச் சின்னமாக மாறியுள்ளது.

இன்று துன்பத்தில் உழலும் பல மக்கள், ஆறுதலைப் பெற்று வேதனையில் வெதும்பித் தவிக்கும் சிலுவைக் காட்சி பலருக்கு ஆறுதல் அளிப்பதைக் காணலாம்.

'அன்பர்க் கடைக்கலமும் தேவ பெலனும் சிலுவை
துன்பம் துடைத்திடும் தூய துணையாம் சிலுவை'

ஆம் சிலுவை ஆறுதலின் வழியை காட்டும் ஓர் அன்புச் சின்னம்,

சிலுவையின் செம்பொருளை அறிந்துணராத பலர் – இதனை வெறும் அழகுச் சின்னமாக – ஒரு மந்திர சக்தியுள்ள ஒரு சின்னமாகப் பயன்படுத் துகின்றனர். எனவே இவர்கள் மடமை; எங்களுக்காகத் தன்னுயிரை ஈந்த எம்பெருமானை இழிவுபடுத்துகிறதல்லவா? வேறு சிலர் கழுத்தில் சிலுவை யைத் தொங்க விடுவதனால் எத்தகைய ஆபத்திலிருந்தும் தாம் தப்பலாம் என எண்ணுகின்றனர். – இராணுவத்தினர் பல முறை ஒரு சிலுவை தரும்படி என்னிடம் கேட்டனர். அவர்கள் வேறு சமயத்தைச் சேர்ந்த போதி லும், சிலுவையை அணிந்தால் ஆபத்திலிருந்து தப்பலாம் என அவர்களிற் சிலர் நம்புகின்றனர். ஏன், கிறிஸ்தவர்களிலும் பலர் தாம் இரவில் துயிலப் போகும் போது கெட்ட கனவுகளால் தமது தூக்கம் குழம்பாமல் இருக்க, தமது தலையணைக்கடியில் சிலுவையை வைத்துத் தூங்குவார்கள். இதுவும் ஒரு வகையான குருட்டு நம்பிக்கையே – சிந்தியுங்கள்.

கிறிஸ்தேசுபிரான் – நமது பாவங்களைத் தன் மேல் சுமந்து – நாம் அடைய வேண்டிய தண்டனையைத் தாமே அனுபவிக்க – சிலுவையில் தம்மைப் பலி யாக ஒப்புவித்து மரித்தார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து – இன்றும் நம்முடன் இருந்து, வழிநடத்துகிறார். இந்த உண்மையை நம்பிக்கையுடன் ஏற்போர்க்கு – சிலுவை ஒரு புனித சின்னம் மட்டுமல்ல – துன்பத்தில் ஆறுதல் அளிக்கும் அன்புச் சின்னமாக அமைகிறது என்பதை அனுபவத் தில் பலர் காண்கின்றனர். சிலுவை ஒரு அன்புச் சின்னமாக மாற்றம் அடைகிறது.

"இல்லரைச் செல்வராக்கும் – பொல்லாரை
நல்லாராக்கும் – நல்லாயன் யேசு சுவாமி
தோளில் சுமந்து சென்ற – சிலுவையோர்
அன்புச் சின்னம்"

– அன்று அனுபவ ரீதியாக – ஒரு பக்தன் மனமுருகப் பாடுவதைக் கவனியுங்கள்.

அண்மையில் – இங்கு தொடர்ந்து நடைபெறும் போரில் – தன் கணவனையும் மகனையும் பறிகொடுத்த ஒரு அம்மாளைச் சந்தித்தேன். அந்த அம்மாள் – தனது கணவனும் மகனும் – தனது கண்களுக்கு முன்பாக இராணுவத்தினரால் சுடப்பட்டு இறந்த காட்சியை கண்ணீர் மல்க எடுத்து விளக்கினார். அவர் கூறிய சோக வரலாற்றைச் செவிமடுத்த எனக்கே கண்ணீர் சொரிந்தது. சிறிது நேரம் அமைதியாயிருந்த பின் – அவருக்கு ஆறுதல் வார்த்தை கூறிவிட்டு என் இருப்பிடத்திற்குப் புறப்பட்ட போது, அந்த அம்மாள் எனக்குப் பின்னாக ஓடி வந்து "போதகர் ஐயா – என் கணவனும் மகனும் இறைவனின் திருமுன் புது வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறினீர்கள் – இதை நான் நம்புகிறேன். இந்த விசுவாசத்தில் நான் தளர்ந்து போகாதிருக்க எனக்காக செபியுங்கள், இறைவன் இத்துன்பத்தைத் தாங்க எனக்குப் பெலன் தரும்படி செபியுங்கள்" என்று மன்றாடினார். இத்துன்பச் சூழலில் தான் – வருத்தப்படுவோர்க்கும் பாரம் சுமப்பவர்க்கும் ஆதரவாய் உள்ள இயேசுவின் சிலுவையடியில் விழ வேண்டியது நமது கடமை என்ற உண்மை விளங்குகிறது. தான் சுமக்க முடியாத துன்பம் தன்னை அழுத்திய போது – அன்பின் சிலுவைநாதர் தன் காயப்பட்ட அன்பின் கரங்களினால் தன்னைத் தாங்கியதை இந்த அம்மாள் தன் அனுபவத்தில் கண்டார்.

சமீபத்தில் கொலையுண்ட பத்திரிகையாளர் நிமலராஜனது மனைவியைச் சிலுவை நோன்பு நாட்களில் சந்தித்தேன். அந்த அம்மாள் தனது கணவன் சுடப்பட்ட விவரத்தை மீண்டும் கண்ணீரோடு சொன்னார். "என் கணவன் சுடப்பட்டதும் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு போன போது, அவரது உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என இறைவனிடம் மன்றாடினேன். ஆனால் சிறிது நேரத்தின் பின் அவரது சடலத்தைத் தான் வீட்டிற்குக் கொண்டு வந்தனர். அவரின் ஆன்மா இறைவன் திருமுன் சாந்தியடையும் என நம்புகிறேன் எனக்காக செபியுங்கள்" என்று பணிவுடன் வேண்டினார். இவரின் மன ஆறுதலுக்காகச் செபிக்கும் போது இந்த அம்மாளின் கணவரைச் சுட்டவர்களை மன்னிக்கும் படி சிலுவையின் நாதரை வேண்டினேன். இறைவன் விவரிக்க முடியாத ஆறுதலை எங்களுக்குத் தந்தார். இவர் கிறிஸ்துவுக்குள் ஆறுதல் அடைந்திருப்பதைக் கண்டு இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

துன்பப்படுவோரின் தோழமையின் அடையாளமாக நம்பிக்கையின் சின்னமாக, இயேசு சிலுவையில் தொங்குகிறார். எங்கே வறுமை, நோய், துன்பம்,

பசி, கைவிடப்பட்ட அனுபவம் இருக்கிறதோ, அங்கே தான் இருப்பதாக இறைவன் கூறியது இயேசுவின் சாவில் நிரூபிக்கப்படுகிறது. இயேசுவின் சிலுவை மரணம், அவரின் அடியவர்க்கு நம்பிக்கை அளிக்கிறது என்பதில் ஐயமில்லை.

இறுதியாக என்னை அண்மையில் அதிகமாக வாட்டிய ஒரு சம்பவம் – என்னையும் என் நண்பனையும் தன் வீட்டில் மதிய உணவு அருந்தும்படி ஒரு அம்மாள் அழைத்தார். விருந்திற்கு வேண்டிய ஆயத்தங்களை நல்ல முறை யில் செய்து முடித்த பின், சிலுவை நாதரை வணங்கிவிட்டு எல்லாம் முடிந் தது என்று கூறி மனநிறைவுடன் நாற்காலியில் உட்கார்ந்தார், அடுத்த சில நிமிடங்களில் மலர்ந்த முகத்துடன் இறைவனின் திருவடிகளைத் தழுவிக் கொண்டார். இந்தச் சம்பவம் என்னை அதிகமாகத் தாக்கிய போதிலும், நம்பிக்கையின் சிலுவைநாதர் எனக்கு விவரிக்க முடியாத ஆறுதலை அளித்தார் – இந்த ஆறுதலையும் நம்பிக்கையையும் "நானே உயிர்த்தெழு தலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவா. 11:25) என்ற திருவாக்கின் செய் தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு – அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட முடிந்தது.

இன்றைய சூழ்நிலையில் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்து தத்தளிக்கும் நம் மக்களுக்குச் சிலுவை ஆறுதலும், நம்பிக்கையும், அன்பும் பொதிந்த ஒரு புனித சின்னமாகத் திகழ்கின்றது என்பதை நாம் உணர்வது அவசியம்.

"கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்"

என் மீட்பர் உயிரோடிக்கையிலே எனக்கென்ன குறையுண்டு?
நீ சொல் மனமே!

*வண. பா. தேவதாஸ்*
**(சங்கானைத் திருச்சபை)**

# கிராம மக்கள் மத்தியில் திருப்பணிவிடை

## கிராம மக்களின் சூழ்நிலை

கிராம மக்கள் மத்தியில் கிறிஸ்தவத் திருப்பணியாற்றப் போகும் போது, கிராம மக்களின் இன்றைய சூழ்நிலை என்ன என்பதை கிறிஸ்தவத் திருப்பணியாளர் அறிந்திருப்பது அவசியம். நகர மக்களைவிட கிராம மக்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும், அறிவு ரீதியாகச் சிந்திப்பது குறைவுற்று மூட நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருப்பர் என்பது பொதுவான அபிப்பிராயம். ஆயினும் இம்மக்கள் இறை பக்தியுள்ளவர்களாகவும் ஒரு மத குருவை உயர்நிலையில் வைத்து மதிப்பவர்களாகவும் இருப்பர் – அவர் சொல்லும் வாக்கை இறை வாக்காகப் போற்றுவர்.

இன்றைய யாழ், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பிரதேச கிராமங்களின் சூழ்நிலையை எடுத்து நோக்குவோமாயின் – பின்வரும் நிலைபரத்தைக் காணலாம்.

- ⇨ நாட்டின் போர் – இராணுவக் கெடுபிடிகள் ஆகியவற்றின விளைவால் ஆண் பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் செல்ல, திருமண இணைப்புகளுக்காக யுவதிகளிற் பலரும் வெளிநாடு சென்றுள்ளனர். மேலும் பல்கலைக்கழகப் படிப்பு, வேலை வாய்ப்புகளுக்காக நகரங்களை நோக்கிப் பிள்ளைகள், நகர்ந்து கொண்டிருக்கின்றனர். இதன் விளைவாகக் கிராமத்தின் பல வீடுகளில் வயது முதிர்ந்த பெற்றோர் தனிமையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.
- ⇨ கணவன்மாரும், ஆண் பிள்ளைகளும் சிலர் சுடப்பட்டும், சிலர் கைதிகளாகவும் இருக்கின்றனர். இதனால் பல கிராம குடும்பங்களில் விதவைகளும், ஆண் துணை இல்லாத பெண்களுமே குடும்பப் பாரத்தை சுமக்கின்றனர்.

- போரினால் மிதிவெடிகளில் சிக்கிக் கால்களை இழந்தும், காயப்பட்டும் இருப்பதோடு, இடப்பெயர்வுகளினால் நல்ல உணவு, சுகாதார வசதி கிடைக்காமை – என்பவற்றால் உடல், உள நோயுற்றவர்களாகக் கிராம மக்கள் மாறியுள்ளனர். வேலை வாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு என்பவற்றால் பல குடும்பங்கள் பசி பட்டினியில் கிடக்கின்றனர். அநாதைப் பிள்ளைகளின் தொகையும் அதிகரித்துள்ளது.

- நாட்டில் காவல் துறையின் நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாகக் கிராம மக்கள் மத்தியில் களவு, மதுபானப் பாவனை, பாலியல் வல்லுறவு நிகழ்வுகள் என்பன அதிகரித்துள்ளன.

இப்படியாக இன்று நமது நாட்டில் தமிழ் கிராமங்களில் அன்னியர் அடக்கு முறை ஆட்சி, அறநெறி வாழ்வுச் சீர்குலைவு, பிள்ளை – பெற்றோர் உறவுக்கான ஏக்கம், பசி, நோய் என்பவற்றின் கொடூரத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான அங்கலாய்ப்பு என்பன, காணப்படுகின்றன. ஆகவே இத்தகைய ஒரு சூழ்நிலையில் தம்மை நேசிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்லக்கூடிய ஒரு நல்ல தலைவரை, நற்பண்பு நிறைந்தவரை, நல்ல குருவை, நல்ல ஆசானைக் காண மக்கள் ஏங்கி நிற்கின்றனர்.

## *கிறிஸ்தவ திருப்பணி என்பது – ஆண்டவர் இயேசு ஆற்றிய திருப்பணியை அடிப்படையாகக் கொண்டது*

இன்று பல கிராமங்களில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் முன்னேற்றச் சங்கம் போன்ற பல சனசமூக நிலையங்களால் நடத்தப்படும் சங்கங்களும், போரூட், கெயர் நிறுவனம், யூ.என்.எச்.சீ.ஆர் போன்ற பல அரச சார்பற்ற நிறுவனங்களும் மக்களுக்குப் பணியாற்றி வருகின்றன. இவைகளின் மத்தியில் கிறிஸ்தவத் திருப்பணியின் சிறப்புத் தன்மை என்ன? கிறிஸ்தவத் திருப்பணியாளரில் காணப்பட வேண்டிய சிறப்பம்சம் என்ன? என்பதனை மனதில் கொள்ள வேண்டும். கிறிஸ்தவத் திருப்பணியின் சிறப்புத் தன்மை அக்கிராமத்தில் பணியாற்றும் கிறிஸ்தவ திருப்பணியாளரிலேயே தங்கியிருக்கின்றது. அவர் தனது குருவாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆற்றிய திருப்பணியை பிரதிபலிக்க வேண்டும்.

## அர்ப்பணிப்பும் ஆவியின் வல்லமையும் கொண்ட திருப்பணி

ஆண்டவர் இயேசு தகுந்த ஆயத்தத்தோடும் ஆவியின் வல்லமையோடும் பணியாற்றினார். (லூக்கா 4:1, 14) தூய ஆவியின் வல்லமை இன்று திருப் பணியாளரில் காணப்பட்டால் மட்டுமே, இயேசுவைப் போல் நன்மை செய்கிற வராய் சுற்றித் திரிய முடியும். அநேகரை மீட்பதற்கு ஈடாகத் தனது உயிரை நேர்ந்துவிடல். (மாற். 10:45) தமக்குக் கீழிருப்போரின் கால்களை கழுவுமள வுக்கு தாழ்மை (யோவா. 13:15), இறைவேண்டலில் நிலைத்திருத்தல் (லூக். 5:16, மாற். 1:35), பகைவனையும் மன்னித்துவிடும் மாண்பு (மத். 5:44). இத்தகைய பண்புகள் – அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களிடமோ எதிர் பார்க்கப்படுவதில்லை. இவை கிறிஸ்துவின் வழியாகக் கிறிஸ்தவ திருப் பணியாளரிடம் எதிர்பார்க்கப்படும் குணாம்சங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக "மக்களின் பாடுகள் மத்தியில் அவர்களோடு உடனிருத்தல்" என்பது கிறிஸ்தவ திருப்பணியாளரிடம் மிக முக்கியமாக எதிர்பார்க்கப் படுகின்றது.

ஒரு கிராமத்தில் உணவு தேவைப்படுவோருக்கு உணவும், மருந்து தேவைப்படுவோருக்கு மருந்தும், இருப்பிடம் தேவைப்படுவோருக்கு குடிசை அமைக்கக்கூடிய பொருட்களையும் கொடுத்துவிட்டு – அரச சார்பற்ற ஊழி யர்களோ, உள்ளூர் கிராம அபிவிருத்தி ஊழியரோ, அல்லது அரசாங்க ஊழியரோ சென்று விடுவார், ஆனால் ஒரு கிறிஸ்தவத் திருப்பணியாளர் உதவியை செய்து விட்டு, மக்களை விட்டு சென்றுவிட முடியாது. அவர் களின் உணர்வுகளையும் சோகங்களையும், ஏக்கங்களையும் கேட்டும் அறிந் தும் தாமாகவே புரிந்தும் அவர்களின் பாடுகளின் மத்தியில் அவர்களோடு உடனிருத்தல் தான், கிறிஸ்தவத் திருப்பணியின் மேன்மையாகும். ஒரு கிராமத்தின் ஒவ்வொரு குடும்பமும் கிறிஸ்தவத் திருப்பணியாளரைத் தமது சகோதரன் அல்லது தமது நண்பர் அல்லது தமது குரு என்று பாச உணர்வுடன் ஏற்கவும், திருப்பணியாளர் அக்குடும்பத்தின் ஒருவரைப் போல் அவர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்கு கொண்டு வாழுதலுமே – கிறிஸ்தவத் திருப்பணியின் மேன்மையாகும்.

தம் சகோதரன் இலாசரு இறந்த பொழுது – தம் குரு, அல்லது தமது குடும்ப நண்பர் இயேசுவை அழைக்க மார்த்தாளும் மரியாளும் ஆளனுப்புகின்றனர். அவர் அங்கு சென்று – அவர்களோடு சேர்ந்து கண்ணீர் விட்டார். அதைக் கண்ட யூதர்கள், பாருங்கள் இலாசர் மேல் இவருக்கு எத்துணை அன்பு என்று பேசிக் கொண்டனர். (யோவா. 11:3, 35)

## நோயுற்ற மக்கள் மீது கரிசனை

ஆண்டவர் இயேசு தாம் சென்ற கிராமங்களில் நோயுற்ற மக்களைக் கண்ட போது – மிகுந்த கரிசனை வைத்தார், மனதுருகினார். (மாற். 1:41) என்று விவிலியத்தில் வாசிக்கின்றோம். (மத். 9:36), பேதுருவின் மாமியார் வீட்டுக் குச் சென்று – சாதாரணமாக எல்லோருக்கும் வரும் காய்ச்சலை குணமாக்கு மளவுக்கு நோயுற்ற மக்களின் மேல் இயேசுவின் கரிசனை இருந்தது – (மாற். 1:30) – இன்று நமது நாட்டில் நடைபெறும் போரினால் தமிழ்ப் பிரதேச கிராம மக்கள், நோயுற்ற சமுதாயமாக மாறியுள்ளனர். நான் எனது மகளின் கிளினிக்கிற்காக மாதா மாதம் ஒரு நாள் யாழ் ஆஸ்பத்திரிக்கு சென்று அங்கு பலமணி நேரங்களைச் செலவிட்டு வருகின்றேன். அப்போதெல்லாம் யாழ் ஆஸ்பத்திரியின் சகல பகுதிகளிலும் சோகத்தோடு பலபல நோய் களோடு நிற்கும் திரளான மக்கள் கூட்டத்தை காணும்போது ஒரு நோயுள்ள சமுதாயமாக நமது சமுதாயம் திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளது என்று உணரு கின்றேன். இடம்பெயர்வினாலும், நல்ல உணவு கிடைக்காமையினாலும், பல கிராம மக்கள் மெலிந்து உடல், உள நோயாளர்களாக மாறியுள்ளனர். இவர் களில் அநேகர் முதிர்வயதினரும் சிறுவர்களுமே. பல முதிர் வயதுள்ள பெற் றோர் வீடுகளில் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றனர், பராமரிக்க அன்பு காட்ட, பேசப் பழக யாருமின்றி தனிமையில் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்தவத் திருப்பணியாளர் இவர்களின் வீடு களுக்குச் சென்று இவர்களுக்காக செபிப்பதும், இவர்களை ஆறுதல்படுத்து வதும் கிறிஸ்தவத் திருப்பணியாகும்.

## விதவைகள், பெண்கள், சிறுவர்கள் மீது கரிசனை

ரோம, யூத கலாச்சாரத்தில் பெண்கள், சிறுவர்கள் மனிதராக மதிக்கப்பட வில்லை. ஆனால் இயேசு அவர்களின் உரிமைகளை மதித்தார். வீடுகளுக் குச் சென்று அவர்களோடு பேசினார். அவர்களின் மனப் பாரங்களை நீக்கினார். (யோவா. 12:1–3, மாற். 5:29, 34) இன்று போரினால் நமது கிரா மங்களில் விதவைகளின் தொகையும், சிறைகளில் கணவன், ஆண் பிள்ளைகள் அடைக்கப்பட்டிருப்பதினால் குடும்பப் பாரங்களைத் தனியே சுமக்கும் பெண்களின் தொகையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் கிரா மங்களில் தகுந்த பராமரிப்பின்றி பிள்ளைகள் வளர்கிறார்கள். இவர்கள் சிறுவயதிலேயே களவெடுக்கவும், துர்நடத்தைப் பழக்கங்களுக்கும் ஆளா கின்றனர். இச் சிறுவர்களின் உணவுக்கும், கல்விக்கும், பராமரிப்புக்கும் ஏற்ற ஒழுங்குகளை செய்து கொடுப்பதின் மூலம் குடும்பப் பாரங்களைத்

தனியாகச் சுமக்கும் விதவைகள். பெண்களின் பெருமூச்சுகளை திருப் பணியாளர் நீக்கி விடலாம்.

## திருப்பணியின் சில அனுபவங்கள்

(அ) சமயக் கல்வி:

கிராம மக்கள் கிறிஸ்துவில் வைக்கும் நம்பிக்கை மூலம், பல்வேறு தேவை களை நிறைவு செய்யும் நோக்குடனும் திருச்சபையில் வந்து சேருவார்கள். அப்போது தாம் முன்பு கொண்டிருந்த இந்து மத சடங்காச்சார நம்பிக்கை களையும் அடிமனதில் கொண்டவர்களாகவே வந்து சேருவர். கிறிஸ்தவ திருப்பணியாளர் புதிதாய் திருமுழுக்குப் பெற்று சபையில் சேருவோருக்கு கிறிஸ்தவ பாரம்பரியம், கிறிஸ்தவ நம்பிக்கைகள், எமது கிறிஸ்தவ சடங் காச்சாரங்களை சரியாகவும், முழுமையாகவும் கற்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் இருமத கலாச்சாரங்களை அனுசரிக்கிறவர்களாகவுமே காணப் படுவர். இந்த நிலை கிறிஸ்தவ சபைக்கும், கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் ஆபத்தான நிலையாகும்.

நான் வன்னியில் இரண்டு கிராம சபைகளுக்கும், யாழ்ப்பாணத்தில் ஒரு கிராம சபைக்கும் போதகராகச் சென்றபோது இந்த ஆபத்தான நிலையைக் கண்டேன். அவர்களைச் சரியான கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் கலாசார அனுசரிப்புக்கும் கொண்டு வர, பல பிரயத்தனங்களைச் செய்தேன். தொடர்ந்து திருச்சபை, திரித்துவம், திருமுழுக்கு, பரிசுத்தாவி, அந்நிய பாஷை என்பன பற்றி வேதப்படிப்புகளை நடத்தினேன். அருளுரைகளை ஆயத்தம் செய்ய பல மணி நேரங்களை செலவிட்டேன். கிறிஸ்மஸ் இன்னிசை வழிபாடுகளையும், ஈஸ்டர் பஜனைகளையும் நல்ல முறையில் ஒழுங்கு செய்தேன். இந்த வழிகள் மூலம் கிறிஸ்தவ சமயக் கல்வியை முழுமையாக கொடுக்க நாம் முற்படலாம்.

ஒரு முறை வன்னியில் எமது சபையைச் சேர்ந்த ஒருவருக்கு திருமணம் நடைபெற ஆயத்தம் நடந்தது. கிறிஸ்தவ திருமண வழிபாட்டு ஒழுங்கு முறை என்ன என்பதனை அவருக்கு விளக்கி வைத்தேன். ஆனால் அவர் என்னிடம் எப்படி திருமண அழைப்பிதழ் (Wedding Card) எழுதுவது என்று கேட்காமலேயே அச்சடித்துக் கொண்டு வந்து எனக்கும் ஒரு அழைப்பிதழ் தந்தார். அதில் மேலே இந்து மத அடையாளமானது உ என்பது அதனைத் தொடர்ந்து இயேசு, மரி, சூசை துணை என்ற வாசகமும் இருந்தது. பின்னர்

இந்த சுப நாளில் இத்தனை மணிக்கும் இத்தனை மணிக்கும் இடையில் திருமணம் நடைபெறும் என்றும் எழுதப்பட்டிருந்தது. இந்த நிலை அங்கு மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் சில கிராம சபைகளிலும் காணப்படுகின்றது. புதிய கிராம சபைகளை உருவாக்கும் போது அந்த புதிய சபைக்கு முதல் போதகராகச் செல்பவர் கிறிஸ்தவ கல்வியை முழுமையாகக் கொடுக்க வேண்டும். (மாற்கு 2:21–22) இவ் வசனங்களை இந்த இடத்தில் ஒப்பிடலாம் என்று எண்ணுகிறேன். அதாவது முழுவதும் கிறிஸ்தவ தன்மை உடையவர் களாய் அவர்களை மாற்றி அமைக்க வேண்டும்.

## (ஆ) இளைஞர்களுக்காக:

ஒரு கிராமத்தில் ஆசிரியர், கிராம அலுவலர், இந்து, கிறிஸ்தவ மதகுரு ஆகியோரே மக்களின் சில ஆபத்தான நேரங்களில் அவர்களுக்கு உதவக் கூடியவர்கள் என்று அவர்கள் எதிர்பார்ப்பர். நான் ஆனைக்கோட்டையில் போதகராக இருந்தபோது எமது சபையைச் சேர்ந்த ஒரு வாலிபனையும் அவரது இரு நண்பர்களையும் (இந்து) ஒரு மினிதியேட்டர் அமைக்கும் விடயத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக எதிரி கொடுத்த தவறான தகவலின் பேரில் இராணுவத்தினர் வந்து பிடித்துச் சென்று தமது முகாமில் அடைத்து விட்டார்கள். அங்கு இரண்டு நாட்கள் அடி உதையும் போட்டிருக் கிறார்கள். மூன்றாம் நாள் அம் மூவரின் பெற்றோர்களும் சகோதரர்களும் என்னிடம் வந்து அவர்களுக்காக சென்று முகாமில் கதைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். நீங்கள் உங்கள் கிராம அலுவலரிடம் சொல்லி அவரை கூட்டிச் செல்லவில்லையா என்று கேட்டேன். நாங்கள் அவரிடம் செல்லவில்லை. அவர் ஒரு அக்கறையில்லாதவர், பயந்தவர், நீங்கள் ஒரு தடவை வந்து பேசுங்கள் 'பாதர்' என்று அழுதார்கள். 'நீங்கள் போய்க் கதைத்தால் நிச்சயம் விடுவார்கள்' என்று நம்பிக்கையோடே வேண்டிக் கொண்டார்கள். நான் இறைவனை பிராத்தித்துக்கொண்டு முகா முக்குச் சென்று இராணுவ அதிகாரியிடம் கதைத்தேன். 15 நிமிட உரை யாடலின் பின்னர் 'பாதர்' உங்கள் பொறுப்பில் அவர்களை விடுதலை செய்கின்றோம் என்று கூறி என்னிடம் கையொப்பம் வாங்கிவிட்டு அவர் களை விடுதலை செய்தார்கள். பெற்றோர்களும் இளைஞர்களும் நன்றி தெரிவித்து விட்டுச் சென்றார்கள். இன்றைய போர்க் காலச் சூழ்நிலையில் கிராம இளைஞர்களை ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் பணியும் கிறிஸ்தவ திருப்பணியே ஆகும். "சிறையிலிருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள்" என்பார் இயேசு (மத்தேயு 25:36) மக்கள் பாடுகளின் மத்தியில்

தன்னை இணைத்துக் கொள்ளாத திருப்பணியாளரின் திருப்பணி மக்களோடு பேசாது.

### *முடிவாக*

ஆண்டவர் இயேசுவின் திருப்பணியின் பெரும்பகுதி கலிலேயா, சமாரியா நாடுகளின் கிராமங்களிலேயே நடைபெற்றது. கிராம மக்கள் தான் இயேசுவை திரள் கூட்டமாக பின்பற்றினார்கள். தமது 12 சீடர்களையும் அனுப்பிய போது அவர்கள் கிராமங்கள் தோறும் திரிந்து நற்செய்தியை அறிவித்து நோயாளிகளை குணமாக்கினார்கள். (லூக். 9:6) கிராம மக்களிடையே சென்றால் எம்மை நாம் வளர்க்க முடியாது. உல்லாசத்தை அனுபவிக்க முடியாது. ஆனால் எம்மை இழந்து அவர்களை உயர்த்தி விட முடியும். இயேசுவின் இந்த அழைப்புக்கு இன்றைய கிறிஸ்தவத் திருப் பணியாளர்கள் யாவரும் ஆயத்தமா?

*வண. ஜி. டி. மைனசீலன்*
(பண்டத்தரிப்பு சபை)

## Make your life positive

*Count your blessing instead of your crosses,*
*Count your gains instead of your losses,*
*Count your joys instead of your woes,*
*Count your friends instead of your foes,*
*Count your courage instead of your fears,*
*Count your full years instead of your lean,*
*Count your kind deeds instead of your mean,*
*Count your health instead of your wealth,*
*Count on God instead of yourself,*

*- Anon -*

# பாவம் என்றால் என்ன?

- சிந்தனைத் துளிகள் -

முதல் மனிதன் – ஆதாம் ஏவாள் பாவத்திற்குட்பட்டதால் நாமும் பாவத்திற் குள்ளானோம். எனினும் நான் எவ்வித பாவத்தையும் செய்யவில்லை என நம்மிற் பலர் கூறுகின்றனர் – பலர் அவ்வாறே நினைக்கின்றனர்.

இறைமகன் கிறிஸ்து பாவங்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்துப் பாவ நிவாரண பலியாகச் சிலுவையில் தம்மை ஒப்புக் கொடுத்து, மரித்து உயிரத் தமையால், அவரை விசுவாசிக்கும் நமக்குப் பாவங்கள் மன்னிக்கப்பட்டன எனச் சிலர் நம்புவதை, நாம் கேட்கிறோம் அல்லவா?

எனவே பாவம் என்றால் என்ன? என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் அவசியம். பாவம் என்பது மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக் களிலிருந்து தவறுவதே ஆகும். பொறுப்புக்களிலிருந்து தவறும் போது மனிதன் பாவத்திற்குட்படுகின்றான்.

மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை ஒரு சிலுவைக்கு ஒப்பிடலாம். ஒரு சிலுவையின் மையத்தில் மனிதனை வைத்து நோக்கும் போது அங்கு நான்கு நிலைகள் இருப்பதனைக் காணலாம். அவை, (01) மேல்நிலை, (02) கீழ்நிலை, (03) இடதுபுறநிலை, (04) வலது புற நிலை.

இந்நான்கு நிலைகளும் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக் களை எடுத்துக் காட்டி நிற்கின்றன. இதில் மேல்நிலை என்பது மனிதன் கடவுளோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மையையும், கீழ் நிலை என்பது மனிதன் பிற மனிதரோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப் பின் தன்மையையும், இடதுபுற நிலை என்பது மனிதன் இயற்கையோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மையையும், வலது புற நிலை என்பது மனிதன் தன்னோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மை யையும் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

இவ்வாறு மனிதனுக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களில் யாதாயினும் ஒன்றில் மனிதன் தவறும் போது பாவத்திற்குட்படுகின்றான். இந்நிலை களைச் சற்று விரிவாக நோக்குவோம்.

## (01) மனிதன் கடவுளோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மை

மனிதன் கடவுளால் படைக்கப்பட்டவன், சிருஷ்டிகராகிய இறைவனையே என்றும் சார்ந்திருக்கக் கடமைப்பட்டவன். சிருஷ்டிகராகிய கடவுளை என்றும் நினைப்பதும், போற்றுவதும், துதிப்பதுமே அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மேலான பொறுப்பாகும். இக்கட்டுக்கள், வேதனைகள், துன்பங்கள், துயரங் கள், சோர்வுகள், களைப்புக்கள் ஏற்படும் நேரத்தில் மட்டுமன்று – இன்பம், மகிழ்ச்சி ஆனந்தம், மனநிறைவு நேரத்திலும் இறைவனோடு தொடர்பை வைத்திருக்க வேண்டியவன். எந்நாளும், எக்காலத்திலும் இறைவனை நினைந்து நினைந்து போற்றித் துதிக்க வேண்டியவன். இறை ஆற்றலை வியந்து போற்ற வேண்டியவன் இறை சந்நிதிக்குச் சென்று வழிபட வேண்டி யவன். இவ்வாறான மனிதன் இறைவனை மறந்து, இறைப்பற்றிலிருந்து விலகி, இறை சந்நிதானத்திலிருந்து ஒதுங்கி, இறைவனுக்கும் எமக்கும் சம்மந்தம் ஏது – என விலகி நிற்கும் போது, இறைவனை மறுத்து – மறந்து நிற்கும் போது, இறைவன் யாரோ, நான் யாரோ என இறுமாந்து நிற்கும் போது – இறைவனோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பினை விலகி நிற்கிறான், பாவத்திற்குட்படுகின்றான், பாவத்தைப் புரிந்துகொள்கிறான்.

இறைவனில் பற்று வைக்க வேண்டிய மனிதன் உலகத்தில், உலகப் பொருட் களில் பற்று வைக்கும் போது – தனக்கும் இறைவனுக்கும் இருக்க வேண்டிய பொறுப்பிலிருந்து தவறிவிடுகின்றான். "நானே உன் கடவுளாகிய ஆண்ட வர், என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" எனும் இறை கட்டளையை அசட்டை பண்ணி – பணத்தையும், அதிகாரத்தையும் மேலானதாக எண்ணி அவற்றை நேசிக்கின்ற போது, வழிபடுகின்ற போது, பாவத்திற்குள்ளாகின்றான்.

இறைவாக்கை அறிந்திருந்தும் – உணர்ந்திருந்தும், இறை வழியில் நடக் காது விலகி நிற்கும் போது – இறைவனோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பிலிருந்து தவறி விடுகின்றான். செயல்களற்ற விசுவாசத்தால் செத்தவனாகின்றான்.

எனவே மனிதன் கடவுளோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பு என்பது கடவுளில் பற்று வைத்து, அவரைப் போற்றித், துதித்து, அவர் தரும் ஆற்ற லைப் பெற்று – அவர் வாக்கை அறிந்து, உணர்ந்து செயற்படுவதேயாகும். இவற்றிலிருந்து தவறும் போது மனிதன் பாவத்திற்குட்படுகின்றான்.

## (02) மனிதன் பிற மனிதரோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மை

மனிதன் தனித்து வாழ முடியாதவன், பிற மனிதரின் தொடர்பின்றி எந்த ஒரு தனி மனிதனும் உலகில் வாழ முடியாது. ஆகவே தான் மனிதன் ஒரு சமூகப் பிராணி எனக் கூறப்படுகின்றான். இறைவன் மனிதனைப் படைத்த போதும் அவனைத் தனது சாயலில் ஆணும் – பெண்ணுமாகப் படைத்தார். ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கும்படியாகப் படைத்தார். ஆகவே மனிதன் பிற மனிதரோடு தொடர்பைப் பேண வேண்டியவன் என்பதனையும், அத்தொடர்பு அறுக்கப்படும் போது மனிதன் பிற மனிதரோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மை அறுக்கப்பட்டுப் பாவம் உருவாகின்றதையும் காணலாம்.

"உன்னைப் போல உன் அயலானையும் நேசி" எனும் ஆண்டவர் கிறிஸ்துவின் அன்புக் கட்டளை – மனிதன் பிற மனிதரோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் ஆழத்தை எடுத்துணர்த்துகின்றது.

மனிதன் பிற மனிதனைத் தாங்க, பராமரிக்க, அரவணைக்கப் பிற மனிதனின் சுமைகளை இறக்க, தன்னாலானவைகளைச் செய்தல் வேண்டும். தன் அறிவுத் திறத்தால் பிறர் அறிவீனங்களைக் களைதல் வேண்டும். தன் திடகாத்திரத்தால் திடகாத்திரமற்றவர்களைத் தாங்க வேண்டும். தன் உயர்நிலையால் பிறர் இழிநிலையைப் போக்க வேண்டும். அவ்வாறாயின் பிற மனிதனைத் தன்னைப்போல் ஓர் மனிதனாக ஏற்றல் வேண்டும். அவ்வாறு இல்லாது அடுத்தவனை அடுத்துக் கெடுக்கும் போது, கெடுக்க நினைக்கும் போது, பழிவாங்கும் போது, பழிவாங்கத் தூண்டும் போது, அவமானப்படுத்தும் போது, அவமானப்படுத்த நினைக்கும் போது பாவத்திற்குட்படுகிறான். மனிதன் பிற மனிதனுக்கு ஏற்படுத்தும் தீச் செயல்களால் மட்டுமன்றி, தீய எண்ணங்களாலும் பாவத்தை ஏற்படுத்துகின்றான்.

## (03) மனிதன் இயற்கையோடு கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மை

இறைவன் உலகத்தைப் படைத்து – சகலத்தையும் ஆண்டு கொள்ளும் மேலான பொறுப்பை மனிதனுக்குக் கொடுத்தார். இவ்வாறான பொறுப்பைப் பெற்ற மனிதன் – அப்பொறுப்பை மறந்தவனாக இயற்கைக்கு, இயற்கையில் அழிவை ஏற்படுத்துபவனாக ஆகி பாவத்தைச் செய்கிறான். பாவத்திற்குட்படுகிறான். இயற்கையைப் பராமரிக்க வேண்டிய மனிதன், இயற்கையில்

அழிவை ஏற்படுத்தும் போது, இயற்கை சமநிலை குன்றுவதையும், இதனால் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுவதனையும் இன்று இயற்கை விஞ்ஞானிகள் ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டுகின்றனர். பொறுப்பற்ற முறையில் காடுகள் அழிக்கப்படுவதால் மழை குறைவுபடுவதையும், பொறுப்பற்ற முறையில் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதால் வளப்பற்றாக்குறை ஏற்படுவதையும், நிலநடுக்கம், மண்சரிவுகள் காட்டுத் தீ போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதையும் உதாரணமாக எடுத்துக் காட்டுகின்றனர்.

இயற்கையை – இயற்கை வளங்களை – பாதுகாக்காது மனிதன் அப்பொறுப் பிலிருந்து தவறும்போது, பாவத்தை ஏற்படுத்துகிறான். பாவத்திற்குட்படு கிறான். ஆகவேதான் படைப்பனைத்திற்கும் நற்செய்தி அவசியமாகின்றது.

## (04) மனிதன் தன்னோடு தான் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பின் தன்மை

மனிதன் தன்னைத்தான் காப்பாற்ற வேண்டியவன், பராமரிக்க வேண்டிய வன், தன்னைப் பராமரிக்க வேண்டிய மனிதன் தன்னை அழித்துக் கொள் ளும்போது – தனக்கு அழிவை ஏற்படுத்திக் கொள்ளும் போது – ஏற்படுத்த நினைக்கும் போது – பாவத்திற்குட்படுகின்றான்.

புகைத்தல், குடித்தல், போதைப் பொருட்களை உபயோகிப்பதன் மூலம், மனிதன் தன் உடலை அழித்துக் கொள்கிறான். உடலுக்குத் தீங்கை ஏற்படுத்திக் கொள்கிறான். பல்வேறு தீங்கான செயல்களால் தன் உடலைக் கெடுக்கின்றான். இதனால் பாவத்திற்குட்படுகிறான்.

தன் ஆத்மாவிற்கு ஆதாயத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய மனிதன் தன் ஆன்மீகத்தைச் சரியான முறையில் நெறிப்படுத்தாத போது – பாவத்தை ஏற்படுத்துகின்றான்.

எனவே பாவம் என்பது மேற்கூறிய நிலைகள் யாவற்றுக்கூடாகவும் ஏற்படும் ஒன்றாக உள்ளது. பாவத்தை உணர்ந்து கொண்டு அதிலிருந்து விடுபட்ட வாழ்க்கையை வாழ இறை உறவு நம் யாவருக்கும் அவசியமானதாகும்.

*சகோ. டீ. எஸ். சொலொமென்*
**(விரிவுரையாளர் – யாழ். கல்லூரி)**

# அவன் என் ஆசை மகன் அல்லவா?

என் மகன் படிக்க வேண்டும். ஆம், படிக்கத்தான் வேண்டும். எனக்குத் தெரியும். எல்லா மனிதர்களும் நேர்மையானவர்களல்லர். உண்மையாக நடப்பவர்களுமல்லர் என்பதை அவனுக்கு அறிவியுங்கள்.

ஒவ்வொரு முரடனுக்கும் ஒரு 'ஹீரோ' இருப்பான். அதே போல் ஒவ்வொரு எதிரிக்கும் ஒரு நண்பன் கிடைப்பான் என்று சொல்லுங்கள். இதற்குச் சிறுது காலம் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அவனிடம் கூறுங்கள். சுயமாகச் சம்பாதிக்கும் ஒவ்வொரு நாணயமும் மாற்று வழியில் கிடைக்கும் 100 நாணயங்களை விடப் பெரியதென்று அவனிடம் கூறுங்கள்.

வெற்றியைக் கண்டு களிப்படையும் அதே வேளை – தோல்வி வந்தால் துவண்டு போகாமல் தன்னம்பிக்கையுடன் இருக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். பொறாமையைக் கைவிட்டு போட்டியைக் கைக்கொள்ளச் செய்யுங்கள்.

புத்தகங்களைப் படிப்பதன் நன்மையை உணர்த்துங்கள். அதே சமயம் அவனைப் புத்தகப் புழுவாக்கிவிடாமல் வான் முட்டும் மலைச் சிகரங்கள், எழில் கொஞ்சும் சோலைகள், பறக்கும் பறவைகள், பாய்ந்துவரும் ஓடைகள் போன்ற – இயற்கை அன்னையளித்த அளப்பரிய அருட்கொடைகளை அனுபவித்து ரசிக்கும் ஆற்றலை அளியுங்கள்.

காப்பியடித்து வெற்றிபெறுவதைவிட – பரீட்சையில் தோல்வியடைவதே மேலானது என்ற உண்மையை உரையுங்கள். தன் இலட்சியங்களில் மற்றவர்கள் குறைகண்டாலும், மனந்தளராமல் முன்னேறும் வழியைப் போதியுங்கள். மற்றவர் சொல்வதைப் பொறுமையுடன் கேட்கப் பழக்குங்கள். முடிவெடுக்கும் சமயம் நேர் வழியில் நின்று தன் மனதில் 'சரி' என்று பட்டதை தயங்காது செயல்படுத்தும் துணிவை அவனில் ஏற்படுத்துங்கள்.

துயரம் சூழும் நேரம் – சிரிக்கும் மனவலிமையை அவனிடம் உண்டாக்குங்கள். தற்புகழ்ச்சிக்கு அடிமையாகாது முகஸ்துதிக்கு மயங்காமலிருக்கும் நடுநிலையுணர்வை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

உழைப்பின் மகிமையை உணர்த்துங்கள். சோம்பலின் ஆபத்தை எச்சரியுங்கள். அதேவேளை பொறுமையின் மகத்துவத்தை அவனுக்குச் சொல்லுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக மனிதாபிமானத்தின் சக்தியையும் எந்த நிலையிலும் அதனை கைவிடாமல் இருக்கும் மன வலிமையையும் அவனிடம் உண்டாக்குங்கள்.

நான் அசைப்படுவது அதிகம்தான்,
அவன் என் ஆசை மகனல்லவா?
எனவே கொஞ்சம் முயற்சி செய்யுங்கள்.

*ஆபிரகாம் லிங்கன்*
நன்றி: - செந்தூரன்

---

## THRER IS A MAN ON THE CROSS

Whenever there is silence around me
By day or by night -
I am startled by a cry,
It came down from the Cross
The first time I heard it,
I went out and Searched -
And found a man in the throes of crucifixion,
And I said "I will take you down,"
And I tried to take the nails out of His feet,
But He said, "Let them be
For I cannot be taken down
Until every man, every Woman, and every child
Come together to take me down."
And I said, "But I cannot hear you cry.
What can I do?"
And he said, "Go about the world -
Tell everyone that you meet -
"There is a man on the cross
Waiting for them to take Him down."

- Elizabeth Cheney -

# வழியனுப்பு வழிபாட்டில் பாடப்பட்ட பாடல்

## (21.04.2001)

தாயின் கருவில் வளரும் போதே
இறைவன் என்னை அழைத்தார்
தியாகப் பாதையில் பயணம் போக
இறைவன் என்னை அழைத்தார்

உன்னை வெறுத்து, உன் சிலுவை சுமந்து
என்னைப் பின்பற்றி வா,
இன்றும் என்றும்
எப்பொழுதும் எனது சுவட்டில் வா

அனுதினமும் என் சிலுவை சுமப்பேன்
உம்மைப் போலவே என் உயிரைக் கொடுப்பேன்
அன்பு மலர என்னை இழப்பேன்
ஆண்டவரே உம் வாக்கில் நிலைப்பேன்

உன் உறவைவிட, உன் உடமையை விட
உனக்கு அன்பு உண்டோ,
என் மீது அன்பு உண்டானால்
என் ஆடுகளைப் பேணிவளர்

உலகின் செல்வம் ஒன்றும் வேண்டாம்
உயர்ந்த பதவி சலுகை வேண்டாம்
இறைவன் அருளும் கிருபை போதும்
இறையரசை நானும் வளர்ப்பேன்.

*பாடல்: ராஜன் றோகான்*
*இசை: கிளேறா அருளானந்தம்*

# கலப்பை

எழுந்து வா;
ஏர் எடுத்து வா;
இவ்வுலகை உழுது
இறையரசினைப்
படைத்திடுவோம்;

புழுதியைத் தட்டி விடு;
புதைந்து கிடக்கும்
தர்மத்தை
தட்டியெழுப்பு –
புதிய வானும்
புதிய பூமியும் காணுவோம்;

எங்கும் களைகள்
எதிலும் களைகள்
புனித தளங்கள் கூட
குள்ள நரிகளின்
கோட்டையாகி விட்டது
களைகள்; – இவை
ஆழ வேர் விட்டு
அடர்த்தியாய்
வளர்ந்திருக்கின்றன
கொத்தி எறிவதற்கு – இவை
பச்சை மரங்களுமல்ல;
பற்றைச் செடிகளுமல்ல;

இவர்கள்
இறையரசை இழிவுப்படுத்தும்
இருளின் பிள்ளைகள்

ஆசை, ஆணவம், அராஜகம்
என
அவதாரம் எடுக்கின்ற
அசூரர்கள்
விளை நிலங்கள் எல்லாம்
களை நிலங்களான பின்பு
அறுவடை எப்படி?

இப்போது எமக்குத் தேவை
அரிவாள்கள் அல்ல,
ஆழ உழுது பண்படுத்தும்
கலப்பைகள்;

ஏர் எடுத்து வா
இவ்வுலகை உழுது
இறையரசை படைப்போம்;

*ராஜன் றோகான்*
(இறுதி ஆண்டு)

# Youth Prays for Peace

*Lord, we are the youth of every land,*
*Pleading for peace,*
*We are the ones who will be sacrificed*
*Unless wars cease:*
*We are the ones elected, Lord, to pray*
*A price too high,*
*You gave us life, and it is not your will*
*That we should die.*

*Open the blind eyes of our leaders, Lord,*
*In every land:*
*Open their hearts and minds and make them wise*
*To understand*
*That war is sad and horrible and wrong,*
*And useless quite;*
*That we, the clean, strong youth of earth,*
*Have the good right*
*To Life and love and happiness and peace.*
*We would not be*
*Killers of men – we want to walk the earth*
*Clean handed, free*
*From war with all its horrors, lust, and greed,*
*Its dark despair,*
*Lord, may there never be another war –*
*This is our prayer.*

**- Grace Noll Crowell -**

# இறையியல் களஞ்சியம்

ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) 200/=
தனிப்பிரதி 25/=

தொடர்புகொள்க:-

**''இறையியல் களஞ்சியம்''**
**இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி,**
**மருதனார்மடம்,**
**சுன்னாகம், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

# IRAI IYAL KALANJIYAM

*A Tamil Theological Quarterly*
*Annual subscription (Including postage within Sri Lanka) Rs. 80/=*
*Single Copy 25/=*

Subscription and Correspondence to :

*Irai Iyal Kalanjiyam*
*Christian Theological Seminary,*
*Maruthanarmadam,*
*Chunnakam, Jaffna.*
*Sri Lanka.*

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை 2001 021-2378